பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஐப்பசி 15 வியாழக்கிழமை (01-11-2001) தொலைபேசி: 3378 ஒலி 325

உங்கள் கண்களைப் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
எரிக் கணேஷ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
(சி-2751)

## பாராளுமன்றை கலைக்கமுன்

# ஜனாதிபதி என்னுடன் ஆலோசனை நடத்தவில்லை

### ஜனாதிபதியின் பி. பி. ஸி பேட்டிக்கு பேராசிரியர் பீரிஸ் மறுப்பு

(நமது நிருபர்)

சர்வஜனவாக்கெடுப்பு நடத்துவது தொடர்பாகவோ; பாராளுமன்றத்தை ஒத்திவைப்பது சம்மந்தமாகவோ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா என்னுடன் எதுவிதமான கலந்துரையாடலையும் நடத்தவில்லை ஜனாதிபதி லண்டன் பி.பி.ஸி க்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்திருந்த கருத்துக்களை மறுத்த முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலண்டனில் தங்கியுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேற்று முன்தினம் ...வு இலண்டன்பி.பி ஸிக்கு ...ளித்த பேட்டியை மறுத்து ...ற்று பத்திரிகையாளர் மகாநாடு ஒன்றை முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி. ... பீரிஸ் நடத்தியிருந்தார். ...ப் பத்திரிகையாளர் மகாநாடு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்றது.

இதில் முன்னாள் அமைச்சர் ஜி எல் பீரிஸ் மேலும் தெரிவித்திருப்பதாவது;

சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது தொடர்பாகவும் பாராளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பாகவும் காலையும் மாலையும் அமைச்சர் ஜி எல். பீரிஸுடன் நன்கு ஆராய்ந்த பின்பே இந்த முடிவுகளை எடுத்ததாக ஜனாதிபதி கூறியிருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும்.

மேற்படி இரண்டு விடயங்கள் தொடர்பாகவும் ஜனாதிபதி சந்திரிகா கூறியிருப்பதை நான் முற்றாக மறுக்கிறேன்.

(8 ம் பக்கம் பார்க்க)

## நகரில் சோதனை

யாழ் நகரை அண்டியபகுதிகளில் நேற்றுப் பிற்பகல் தீவிர சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றது.

வீதிகள், சந்திகள் தோறும் இராணுவத்தினரும் பொலிசாரும் குவிக்கப்பட்டு இச் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ம)

## கிளைமோர் தாக்குதல்

அம்பாறை மாவட்டத்தில் விசேட அதிரடிப் படையினரின் வாகனம் ஒன்றை இலக்கு வைத்து விடுதலைப்புலிகள் கிளைமோர்த்தாக்குதலொன்றை மேற்கொண்டுள்ளனர். அதிரடிப்படையினரின்

(8 ம் பக்கம் பார்க்க)

## கப்பல் தாக்குதலில் உயிரிழந்த கரும்புலிகள்

(வவுனியா)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் படையினருக்கு எரிபொருள் ஏற்றி வந்த கப்பல் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில்;

● கடற்கரும்புலி மேஜர் கடலரசன் / சமுத்திரன் (தம்பிப்பிள்ளை நமசிவாயம்) மட்டக்களப்பு

● கடற்கரும்புலி மேஜர் கஸ்தூரி (தம்பிராசா சுபாசினி) யாழ்ப்பாணம்

● கடற்கரும்புலி கப்டன் அன்புமலர் (பொன்ராசா அன்பழகி) யாழ்ப்பாணம்

● கடற்கரும்புலி கப்டன் கனிவேந்தன் (மயில்வாகனம் சயிக்கான்) யாழ்ப்பாணம்

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்ததாக புலிகள் அறிவித்துள்ளனர்.

கப்டன் கஸ்தூரி புலிகளின் குரல் மற்றும் தமிழீழ வானொலிக் கலைஞராகவும் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந-4)

## குடாநாட்டு மக்களுக்கு வந்த எண்ணெய் கப்பலே தாக்கப்பட்டது

### பலாலி படைத் தலைமையகம் அறிவிப்பு

...கோணமலையில் ...து காங்கேசன்துறை ...முகத்திற்கு எரிபொருள் ...ற்றிச்சென்ற எம்ரீ துன் என்னும் எண்ணெய்கப்பல் மீது எல்.ரீ.ரீ.ஈ இயக்கத்தினர் கடந்த 30 திகதி மாலை ... 30 மணியளவில் தாக்குதல் நடாத்தியுள்ளனர். ...கப்பலில் சுப்பர்டீசல், மற்றும் மண்ணெய், ஒட்டோ, டீசல் போன்ற எரிபொருட்கள் கொண்டுவரப்பட்டிருந்தன.

இவ்வாறு பலாலிபாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகத்தின் தகவல் தொடர்பகம் நேற்றுவெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இந்த எரிபொருள் மூலம் யாழ்ப்பாண மக்களே கூடுதலாக நன்மையடைய விருந்தார்கள் யாழ் மக்களுக்கு மின்

(08 ம் பக்கம் பார்க்க

## தேர்தல் பிரசுரங்களை தபால் கட்டணமின்றி அனுப்பிவைக்க முடியும்

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடவுள்ள அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சுயேட்சைக் குழுவின் தலைவர்கள் தமது வாக்காளர்களுக்கு அஞ்சல் கட்டணமின்றி துண்டுப பிரசுரங்களை அனுப்புவதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நியமனப்பத்திரம் வழங்கப்பட்ட நாளிலிருந்து வாக்களிப்புக்கு முன்னைய 10 நாள் வரை இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அனுப்பப்படும் ஒவ்வொரு கடிதமும் 30 கிராமிற்குள் இருக்க வேண்டுமெனவும் தேவை ஏற்படும் போது சோதனை செய்யப் படக் கூடியதாகவும் இருக்கவேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

## ஐ. தே. கட்சியின் மீது கொலை முயற்சி குற்றம்

...பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட படுகொலை முயற்சியை ஐக்கிய தேசியக்கட்சி இதுவரை கண்டிக்காமல் இருப்பது ஏனென்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ...தில் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன கேள்வி எழுப்பியுள்ளார்.

இப்படுகொலை முயற்சியில் ஐ.தே கட்சிசம்பந்தப்பட்டுள்ளதுடன் இதேபோன்ற ஜனாதிபதியையும் படுகொலை செய்வதற்கு எடுத்த முயற்சி தோல்வி கண்டது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இச்சம்பவங்கள் தொடர்பாக ஐ.தே.கட்சி தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டுமென அவர் மேலும் கேட்டுள்ளார். (உ-5)

## நாரஹென்பிட்டிய தாக்குதல் முழு அளவிலான விசாரணை தேவை

### அத்துக்கோறளை கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு நாரஹென் பிட்டியாவில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகளை முழு அளவில் சுயாதீனமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் காமினி அத்துக்கோறளை அரசிடம் கோரிக்கைவிடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து அச்சம்பவத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் தலையில் போட்டு கட்சிக்கு எதிராகப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அதே வேளை நாரஹென் பிட்டி குண்டுவெடிப்புச் சம்பவத்திலும் ஐக்கிய தேசியக்கட்சியைச் சம்மந்தப்படுத்தி பிரசாரம் செய்வதற்கு தயாராகி வருவதாகவும் தெரிவித்த

(8-ம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் பெற மக்கள் முண்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள எரி...ள் நிரப்பு நிலையங்களில் நேற்று எரிபொருள்களை வாங்குவதற்காக மக்கள் நீண்ட வரிசைகளில் காணப்பட்டனர்.

நேற்று முன்தினம் மாலை ...ருத்தித்துறைக் கடலில் ...படையினரின் எண்ணெய்க் கப்பல் தாக்கி அழிக்கப் பட்டதால் எரிபொருள் தட்டுப்பாடு குடாநாட்டில் ஏற்படலாம் என்ற அபிப்பிராயம் நிலவியதால் பொதுமக்கள் தேவைக்கு அதிகமாக எரிபொருள்களை வாங்கிச் சேகரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். (உ-106)

## படையினர் தெரிவிப்பு

(மந்திகை)

வடமராட்சியில், திக்கம் சந்தி தொடக்கம் அம்பன் வரையான கடற் பிராந்தியத்தில் வழமையான நடைமுறைகளின் படி மீன்பிடிக்கும் பணி இடம் பெற்று வருவதாக படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர். (உ-23)

## நாரஹென்பிட்டிய தற்கொலைத் தாக்குதல் ஜி. எல். பீரிஸே இலக்காம்!

(கொழும்பு)

கொழும்பு நாரஹென்பிட்டியாவில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதல் முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி எல்.பீரிஸை இலக்குவைத்தே நடத்தப் பட்டதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பயங்கரவாதத்தடுப்புப் பிரிவினர்

(8 ம் பக்கம் பார்க்க)

...டுவ நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வாராந்த நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறுசந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினரின் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு வசாவிளான் மகாவித்தியாலய ஆசிரியர் செ.பரமேஸ்வரவின் அறிமுகவுரையைத் தொடர்ந்து, பிரான் பற்று கலைமகள் வித்தியாலய ஆசிரியர் எஸ். செல்வரெட்ணத்தின்''திருப்புகழ்இசை'' இடம் பெறவுள்ளது. (செ)

## இராசி பலன்

01-11-2001
ஐப்பசி 15, வியாழன்
பூரணை மு. ப. 11.58
அச்சுவினி மு: ப. 9:18
இராகுகாலம் 1.33-3.03
சுபநேரம் 7.33-9.03

**மேடம்**
புதியபொருள் சேர்க்கை, ஆழ்ந்தசிந்தை, சயனசுகம், காரியவிருத்தி.

**இடபம்**
பதற்றம், சயன சுகக் குறைவு, தனவரவு, முயற்சி தாமதம்.

**மிதுனம்**
தெய்வசிந்தை, நண்பர்கள் உதவி, பொருள் சேர்க்கை, முயற்சிநன்மை;

**கடகம்**
பிரயாணம், தூரதேச செய்தி, உற்சாகம், முயற்சி கைகூடும்,

**சிங்கம்**
சகோதரர் உதவி, குடும்ப நன்மை, சென்றஇடத்தில் செல்லாக்கு, மனச்சஞ்சலம்.

**கன்னி**
உறவினர் மனஸ்தாபம், வியாதி, போசன சுகம், காரியத்தடங்கல்.

**துலாம்**
அதிகாரம், கௌரவம், நண்பர் சந்திப்பு, முயற்சி நன்மை.

**விருச்சிகம்**
மனமகிழ்ச்சி, புதிய தொழில்சிந்தை, காரிய அனுகூலம், பிரயாணம்.

**தனுசு**
நண்பர்உதவி, தாழ்ந்த சுபாவம், வியாதி, முயற்சி கைகூடும்.

**மகரம்**
தன்னம்பிக்கைக்குறைவு, காரிய தாமதம், தர்மம், தொழில்நன்மை.

**கும்பம்**
இனிய சம்பவம், மனவேற்றுமை, பணவசதி, காரிய அனுகூலம்.

**மீனம்**
மாதர்நட்பு, கௌரவக் குறைவு, முயற்சிதாமதம், சகோதரர் உதவி.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

சகல தமிழ்க் கட்சிகளும்

# பேரினவாதக் கட்சிகளின் நலன் பேணவே தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை வேண்டி நிற்கின்றன

### புதிய ஜனநாயகக் கட்சி செந்தில்வேல் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பேரினவாத ஒடுக்குமுறைக் கட்சிகளுக்குத் தமிழ்க் கட்சிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும்குடைபிடித்துநிற்கின்றன.

எனவே தமிழ்மக்கள் கடந்த கால அனுபவங்களையும் படிப்பினைகளையும் மனதில் நிறுத்தி தமது வாக்குகளை அளிக்க வேண்டும்.

அண்மையில் க. முருகேசு தலைமையில் புத்தூரில்இடம் பெற்ற புதிய ஜனநாயகக்கட்சியின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளரும் முதன்மை வேட்பாளருமான க. செந்தில்வேல் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தனது உரையில்,

ஈ.பி.டி.பி. யினர் பகிரங்கமாகவே பொதுசன ஐக்கிய முன்னணிக்கு ஆலவட்டம் பிடித்து சாமரை வீசி வருகின்றனர்.

அதேவேளை, தமிழ்க் கட்சிகள் நான்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் பச்சைக் குடையின் கீழ் அகமகிழ்வோடுநின்றுவருகின்றனர்.

எவ்வளவு தான் மழுப்பல் நியாயம் கூறினாலும் பேரினவாதக் கட்சிகளுக்காகவே தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை சகல தமிழ்க் கட்சிகளும் வேண்டி நிறகின்றன என்பது தெட்டத் தெளிவு.

ஈ.பி.டி.பி.யினர் கௌரவமாக வாழ்ந்து வந்த தமிழ்மக்களை கையேந்தி நின்றுபணத்திற்காகப் படியேறியிறங்க வைத்துள்ளனர்;

இது தமிழ் மக்களின் அரசியல்சிந்தனையைமழுங்கடித்து அவர்கள் மத்தியில் நவீன அடிமை மனப்பான்மையை ஊட்டி வளர்த்து யுத்தத்தை நடத்திவரும் பேரினவாத ஆளும் வர்க்கத்திற்கு முன்னாலமண்டியிடச் செய்வதாகும்.

இத்தகைய சீரழிந்த நிலையை மாற்றி நிதானமானதும் தூரநோக்குடையதுமான அரசியல் சிந்தனைத் தளத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் கட்டியெழுப்ப வேண்டும்.

அத்தகைய அரசியல் பலம் கொண்டுதமிழ்த்தேசியஇனத்தின் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரானவெகுஜனப்போராட்டத்தை முன்னெடுப்பதற்கு உரிய அங்கீகாரத்தையும்பலத்தையும் பெறுவதற்காகவே புதிய ஜனநாயகக் கட்சி தேர்தலில் மணிக்கூட்டுச் சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இரண்டுபேரினவாத ஆளும் வர்க்கக் கட்சிகளின் கடந்த ஐம்பது வருடகால அரசியல் ஏமாற்றுக்களையும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளையும் அரசியல் ஏமாற்று மோசடிகளையும் தமிழ் மக்கள் அடையாளம் காணுதல் வேண்டும்.

அத்தகையவர்களுக்கு தமிழ் மக்கள் வாக்களிப்பது தமது தலைகளுக்கு மண்வாரிப் போடுவதற்குச் சமமானதாகும்.

நான்கு கட்சிகளின் ஐக்கியம் என்பதும் புலிகளைஅங்கீகரிக்கக்கோரியே இத் தேர்தலில் நிற்பதாகக் கூறுவதும் ஒருவகை ஏமாற்றாகும்.

இத் தேர்தலில் முன் வைப்பதற்கு கண்டு பிடிக்கப்பட்ட 'இன்றைய ஸ்பெசல்' என்று போடப்படும் வியாபாரத் தந்திரமாகும்.

இதே தமிழ்க் கட்சிகள் கடந்த காலத்தில் 'ஐம்பதுக்கு ஐம்பது' 'சமஷ்டி' 'தமிழீழம' போன்றஸ்பெசல்களை அவ்வப்போது முன் வைத்து வாக்குக் கேட்டதை மக்கள் மறந்து விட மாட்டார்கள்.

அவையாவும் பழைய கதையாகிவிடாவே இப்போதுஇத் தேர்தலில் புதிய இன்றைய ஸ்பெசலாக புலிகளுக்கு அங்கீகாரம் வாங்கிக் கொடுக்க நிற்பது வேடிக்கையாக உள்ளது.

கடந்த காலங்களில் புலிகள் இயக்கத்திற்கு எதிராக நின்று வந்த இவர்கள் இன்று வாக்குச் சேகரிப்பதற்காகவே இவ்வாறு வேஷம் கட்டி நிற்கிறார்கள் என்று மேலும் குறிப்பிட்டார்.

# அமைச்சர் பதவியும் அரசபடைக்கூட்டும் கோரிக்கைகளை வென்றெடுக்க உதவாது

### சுரேஸ் பிரேமச்சந்திரன் இவ்வாறு விளக்கம்

(யாழ்ப்பாணம்)

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில் தமது அடிப்படைக் கொள்கைகளை தெளிவாக வெளியிட்டுள்ளன. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை, யுத்த நிறுத்தம், 3ஆம் தரப்பு மத்தியஸ்தம், தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை. இவையே அவ் முக்கிய விடயங்களாகும்.

தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம சிதறுப்படாமல் வலுவாக இருந்தால் மாத்திரமே இக்கோரிக்கைகள் தொடர்பாக வரக்கூடிய எந்த அரசுக்கும் தமிழ்க் கட்சிகள் அழுத்தங்களை பிரயோகிக்க முடியும். அமைச்சராவதாலோ அன்றி அரசபடைகளுடன் இணைந்து செயற்படுவதாலோ இக்கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாது.

நான்கு தமிழ்க கடசிகளின் கூட்டமைப்பு வேட்பாளர் சுரேஸ்பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுளளது.

அவ் அறிக்கையில் மேலும்;

தமிழ் கட்சிகளின் வாக்குகளைப் பெற்று அமைச்சர்களானோரும், அரச படைகளுடன் செயற்படுவதால் இலட்சக் கணக்கில் பணம பெறுவோரும, தமது சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள, மீண்டும் தேர்தல் களத்திற்கு வந்துள்ளனர். தேர்தலில் வலுவான தமிழ பிரதிநிதித்துவம் குழுவொன்றைஉருவாக்குவதன் பதிலும் விட தமிழ் கூட்டமைப்பு மீது சேறடிப்பதும், வாக்குகளை சிதறடிப்பதுமே இவர்களதுமுக்கிய நோக்கமாகும்.

ஒரு பக்கம் யுத்தத்திற்கு ஆதரவு, மறுபக்கம் யுத்த அவலங்களால் பாதிக்கப்படுவோருக்கு பிச்சை இதற்கு பெயர் மக்கள் சேவை என்றும கூறப்படுகிறது.

அரசும் வெளிநாடுகளும், தமிழ் மக்களின் உயிர் வாழ்விற்காக ஒதுக்கும் பணத்தை பிரித்து விநியோகிக்க ஓர் அமைச்சர், பின்னர் அப்படி விநியோகித்தமைக்கு, நாளாந்தம் நன்றி நவிலல், விளம்பரங்கள், இறுதியில ''நன்றி மறப்பது நன்றன்று'' என மக்களுக்கு அன்பான எச்சரிக்கை வேறு, இவ்வாறான கபடவேடதாரிகளை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று கோயில்கள் வாசிகசாலைகள், புனரமைக்க என அரசின் பணத்தை ஒதுக்கலாம் ஆனால் யுத்தம் நிறுத்தப்பட்டாலே முழு அபிவிருத்தி சாத்தியமாகும்.

யுத்த விமானங்களும், பல்குழல் பீரங்கிகளும இன்னும முழங்கியவாறே உள்ளன. அவை எங்கு எப்பொழுது குண்டுமாரி பொழியுமென யாருக்கும்தெரியாது. எனவே அரசின் பணததைக் கொடுத்து மக்களை ஏமாற்றி வாக்குப்பெற்று விடலாம, என்ற ஈ.பி.டி.பி போன்ற அமைப்புக்களின் பொய்த் தோற்றங்களையும் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த தேர்தலைப் போன்றேஇத்தேர்தலிலும் பாரியளவில களள வாக்குகளைப் போட்டு 'பெட்டிகளை நிரப்பி வெல்வதன் மூலம் மக்கள் ஆதரவு தமக்கிருக்கின்றது என்ற பொய்த் தோற்றத்தை உருவாக்க இப்பொழுதே அமைச்சர் குழாம் முயற்சித்துவருகின்றது.

அதற்கு ஆதரவாகபடைப் பலம், ஆயுதபலம், பணபலம் என எல்லாப்பலங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

கடந்த வருடம் மொத்த வாக்காளரில் 40 வீதமானோர் மாத்திரமே வாக்களித்ததால் (கள்ள வாக்குகளும சேர்த்து) அது ஈ.பி.டி.பிக்கு சாதகமாக அமைந்துவிட்டது.

ஆனால் வரப்போகின்ற தேர்தலில் ஏனோ தானோ என்றில்லாமல முழுவாக்காளர்களும வாக்களிப்பதன் மூலமே இக் கூட்டமைப்பானது அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமெனபதுடன், கள்ள வாககுகளையும் தடை செய்யமுடியும்;

எனவே, வருகின்ற டிசம்பர் 5 ஆம் திகதி தேர்தலில் பதிவு செய்யப்பட்ட முழு வாக்காளர்களும, வாக்களிபபதன் மூலமே அரசு ஆதரவுக்குழுக்கள் தோற்கடிக்கப் பட முடியும். என்பதுடன் தமிழ் மக்களின் உரிமைகள் நிலை நிறுத்தப்படுவதற்கும், பாராளுமன்றத்திற்கு வலுவான தமிழ் பிரதிநிதித்துவக் குழுவை அனுப்புவதறகும் முழுமக்களும் ஊக்கத்துடன் செயற்படும படி தாழ்மையுடன் வேண்டுகிறேன் என்றுள்ளது. (உ)

## தரமான

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யியலினூடாகப் புலப்படுத்தப்படுகின்றது. இது கட்டுறு பயில்வை மேற்கொள்ளும ஆசிரிய மாணவருக்கு பாடசாலை சிரேஸ்ட ஆசிரியர் வழிகாட்ட உதவும் சிறப்பு முறையாகவுள்ளது;

கல்வியியற் கல்லூரியில் இருவருட உள்ளகபபயிற்சியில்; தரமுயர்த்தல் கற்கை நெறிகளில் (Upgrading Courses) (பாட உள்ளடக்கம, கற்பித்தல் முறையியல்களில் தர விருத்தியும்விரிவாக்கல்கற்கை நெறிகளினூடாக (Broadening Courses,) அறிவு மூலம் தேடல், திறன மூலம் பதித்தல், மனப்பாங்கு மூலம் பிரயோகித்தல்தகைமைகளையும் விசேட பாங்களினூடாக விசேடபாடஅறிவும் மீபறல் புத்தூக்கச் செயற்பாடுகள் (Refreshing Activities) மூலம் பிரதேச தேவைகளுக்கு ஏற்ப இனம் காணப்பட்ட பயிற்சி, புதியசாதன உருவாக்கங்களுக்குமான பயிற்சியை ஆசிரிய மாணவர்கள் பெறுவர். கட்டுறுப்பயில்வில் முழுமையாகபபாடசாலையின்செயற்பாடுகளில் தம்மை இணைத்துக் கொள்வர். பாடசாலையில் முதற்தடவையாக அவர் பெறும் பயிற்சியும் சேவையும் சமூக அபிவிருத்தி நோக்கி விரிவடைய வேண்டும். கல்வியின் ஒவ்வொரு படியின் போதும் சமுதாய ஈடுபாட்டைப் பெறச் செய்வதன் மூலமே அபிவிருத்தியைப் பொருள் பொதிந்ததாக்கலாம்.

## பரீட்சை

(நீர்வேலி)

அவுஸ்திரேலிய நியூவேல்ஸ் பல்கலைக் கழகமும் இலங்கை தோமஸ்குக் நிறுவனமும் இணைந்து நடத்தும் பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில, கணித, விஞ்ஞானப் பரீட்சைகள் இன்றும நாளையும் நடைபெறவுளளன. (உ-239)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகமுல்லை மாவட்ட மாணவர் ஒன்றியம் 'நாளைநமதே' என்னும் தலைப்பில் நடத்தவுள்ள மாதாந்த கருத்தரங்கில முதலாவதுதொடர் நாளைவெள்ளிக்கிழமைபி.ப3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக சட்ட விரிவுரையாளர் பொன். பூலோகசிங்கம் அறிமுகவுரையையும் முன்னாள் மாவட்ட நீதிபதி மு திருநாவுக்கரசு சிறப்புரையையும் ஆற்றவுள்ளனர். (செ)


கியுமெடிக்கா பிள்ளைகள் இல்லம்
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.

**எமது இலவச வைத்திய சேவை**
**இலவச நடமாடும் வைத்திய சேவையுடன்**
**இலவச பல் வைத்திய சிகிச்சை**

1-11-2001 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு

உயர்திரு து. வைத்திலிங்கம் மேலதிக அரச அதிபர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும் அனைவரையும் அன்புடன் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
[3903]

கியுமெடிக்கா நிறுவனம்
பிள்ளைகள் இல்லம்

# நீதியாகவும் நேர்மையாகவும் பொதுத்தேர்தல் நடத்தப்படும்

## ஜனாதிபதி சந்திரிகா உத்தரவாதம்

(கொழும்பு)

டிசம்பர் மாதம் 5ஆம்திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தப்படும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார்.

இலண்டன் பிபிசியின் வேல்ட் ஏசியன் ருடேநிகழ்ச்சிக்கு அளித்த பேட்டிஒன்றிலேயே அவர்இவ்வாறு கூறியுள்ளார்.

அப்பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேலும் கூறியதாவது;

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு கடந்தஏழு ஆண்டுகளிலும் சகலதேர்தல்களையும் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடத்தியுள்ளது.

இருபத்திரண்டு வருடங்களுக்கு மேலாக நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை அமுலுக்குகொண்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற நடைமுறைகளையும் மீறியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது அவர்களது உதவியுடன் அரச பயங்கரவாதம் நிலவிய காலத்தில் சுமார் 50 ஆயிரம் இளைஞர்களைஎரித்தும், சுட்டுக் கொன்றதுடன், அந்த உடல்களை வீதியின் இருமருகிலும் போட்டார்கள், தமிழ் மக்களைஆறுகளிலும், நீரோடைகளிலும் மிதக்கவிட்டார்கள்.

இந்நிலையில் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்டி மனித உரிமைகளைப் பாதுகாத்து பொருளாதாரத்தை கட்டியெழுப்பி உள்ளது என்று மேலும் அவர் கூறினார். (வ)

# வாழ்வின் வெற்றிக்கு அங்கவீனம்ஒருதடையல்ல

## துணை வேந்தர் உரை

(யாழ்ப்பாணம்)

வாழ்வில் முன்னேறுவதற்கு அங்கவீனம் ஒரு தடையல்ல, முயற்சியும் மனத்திண்மையுமேவெற்றிக்குவழிவகுக்கும். இவ்வாறு யாழ் பல்கலைக் கழக ஊழியர் வின்சன்பிலோமினாவின் பாராட்டு விழாவில் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை உரையாற்றுகையிலே தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; ஒருவரின் மனத்தில் முயற்சியும் முன்னேற வேண்டும் என்ற திண்மையும் இருந்தால் வாழ்வில் வெற்றி பெறலாம், உயர்நிலை அடையலாம் என்றும் தெரிவித்த அவர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை மேலும் முன்னேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

அத்துடன் யாழ். பல்கலையில் இதுவரை சர்வதேச ரீதியாக நிகழ்ச்சிகள் நடத்தவோ அல்லது பெரியளவில் ஆராய்ச்சிகள் செய்யவோ சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்றும் தனது மனக் கவலையை வெளியிட்டார். (செ-2)

# உயர்கல்வி பெறும் ஆண்கள் தொகை யாழில் வீழ்ச்சியடைந்து செல்கிறது

## உதவிக் கல்விப்பணிப்பாளர் உரை

(சுன்னாகம்)

யாழ்ப்பாண சமூகத்தில் ஆண்பிள்ளைகளின் கல்வி நாட்டம் குறைவடைந்து செல்கிறது. பல்கலைக்கழகத்திற்குத் தெரிவுசெய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அவதானித்தால் இது நன்கு புரியும்.

யா/ மல்லாகம் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்புவிழா கடந்த சனிக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் மா. நாகேந்திரசீலன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய தெல்லிப்பழை கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் கா. சந்திரபாலன் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஒழுக்கத்தின் பின்னணியில் உள்ள கல்வியே நல்ல தேர்ச்சியான கல்வியாகும். முதலில் ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளில் இருந்து மாணவர்கள் விலகிக்கொள்ள வேண்டும்.

ஒரு பிள்ளையின் முன்னேற்றத்திற்கு எல்லா ஆசிரியர்களும் ஒன்று சேர்ந்துஉழைக்க வேண்டும். நாம் கற்பிக்கும் பாடங்கள் ஒன்றுடன் ஒன்று இணைந்த பாடங்களாகவே காணப்படுகின்றன.

ஒவ்வொரு மாணவனுக்கும் கற்பிக்கும்ஆசிரியர்கள் முழுமனத்தோடு கற்பிக்கத்தவறின் மாணவனின் பெறுபேற்றில் உயர்ச்சியை காணமுடியாது எனவே ஆசிரியபணியைதமது ஆண்டவன்பணியாகஎண்ணி ஆசிரியர்கள் செயற்பட வேண்டும்.

மாணவர்கள் ஆசிரியருக்கு கீழ்ப்படிவில்லாமல், விசுவாசமில்லாமல், அவர்களுக்கு மதிப்பளிக்காதவராக ஒழுக்கமற்றவராக இருப்பார்களானால்அவர்கள் சிறந்த பெறுபேற்றை பெற்றாலும் அவர்களால் சமூகத்திற்கு எதுவித பயனுமில்லை.

எனவே மாணவர்கள் ஒவ்வொருவரும் நற்பண்புகளை பேணி முன் துணிவையும் நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார். (உ-207)

# வதிவிடக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான வதிவிடக்கருத்தரங்கு நவம்பர் 3 ஆம் திகதி தொடக்கம்5 ஆம் திகதிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாகவும், அறநெறிப் பாடசாலைகளைச் சேர்ந்த ஒவ்வொரு ஆசிரியரை அதில் கலந்துகொள்ளுமாறும் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தெரிவித்துள்ளார். (எ)

# மின்சாரம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

குப்பிளான்பகுதிக்கு நீண்டகாலமாக மின்சாரம் வழங்கப் படவில்லை என அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்களுக்கு பலமுறை தெரியப்படுத்தியும் கூட அவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையெனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (செ-2)

# கர்ப்பிணித்தாய்மார் பலருக்கு குருதிச் சோகை

(அளவெட்டி)

கர்ப்பிணித்தாய்மார்களில் 60 வீதமானோர் குருதிச் சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு ஊட்டச்சத்து இல்லாத அவர்களது உணவே காரணம் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆர். முருகானந்தம் தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தால் அளவெட்டி தெற்கில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட சமூக அபிவிருத்தி சிறிய இடைத்தர கைத்தொழில்களை ஊக்குவிக்கும் கருத்தரங்கில கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அளவெட்டி மேற்கு கிராம அலுவலர் திருமதி ம. மாலாதேவி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கைத்தொழில் விரிவாக்க அபிவிருத்தி உத்தியோகத்தர் கெங்காதரன் கிராம அபிவிருத்திச்சங்க உத்தியோகத்தர் திருமதி சிவராஜா ஆகியோரும் உரையாற்றினார்கள். (எ-237)



வலம்புரி நடத்தும்

அமரர்

## ஆறுமுகம் கமலநாதன்

(கல்விப்பணிப்பாளர்)

ஞாபகார்த்த

# சிறுகதைப் போட்டி

பரிசில்கள்

| | |
|---|---|
| முதலாம் பரிசு ரூபா | 2000 |
| இரண்டாம் பரிசு ரூபா | 1000 |
| மூன்றாம் பரிசு ரூபா | 500 |

போட்டி விதிகள்

★ நாட்டின் சமகாலச் சூழலைக் கருப்பொருளாகக் கொண்டு கதைகள் எழுதப்படவேண்டும்

★ புல்ஸ்காப்தாளில் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும் தாளின் ஒரு பக்கத்திலும் எழுதப்பட வேண்டும்.

★ கதைகள் ஏற்கனவே வேறு பத்திரிகைகளிலோ ஊடகங்களிலோ வெளிவராததாக இருக்க வேண்டும்.

★ ஒருவர் ஆகக் கூடியது இருகதைகள் போட்டிக்கு அனுப்பலாம்.

★ நாட்டின் எப்பகுதியில் வாழ்பவரும் வயது, பால் வித்தியாசமின்றி எழுதலாம்.

★ கதைகள் மொழி பெயர்ப்பாகவோ தழுவலாகவோ இல்லாமல் சொந்தக் கற்பனையில் உருவானது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

★ கதை எழுதுபவர் தனது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி என்பவற்றை பறிதொரு தாளில் எழுதி தாம் எழுதும் கதையுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

★ பரிசில் பெறும் கதைகளும் பாராட்டுப் பெறும் கதைகளும் வலம்புரியில் பிரசுரிக்கப்படும்.

★ சிறுகதைகளை 'ஞாபகார்த்தச்சிறுகதைப் போட்டி' வலம்புரி, இல15, வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு 28-11-2001இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

★ வலம்புரி ஆசிரியர் பீடத்தினர் உள்ளிட்ட நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.

★ பரிசில் அளிப்பு வலம்புரி ஆண்டு விழாவின் போது இடம் பெறும்.

# பண்பற்ற சமுதாயம் பலமுள்ளதாய் இருக்காது

## பேராசிரியர்கந்தசாமிகருத்து

(சுன்னாகம்)

இன்றைய மாணவ சமுதாயம் முன்னைய காலத்து மாணவ சமுதாயத்தைக்காட்டிலும் பலவழிகளில் திறமை வாய்ந்தது. அவர்களிடம் உள்ள திறமைகளை வெளிப்படுத்தி எமது சமுதாயத்திற்குப் பயன்படக்கூடியவர்களாக அவர்களை நெறிப்படுத்துதல் பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் கடமையாகும்என யாழ். பல்கலைக் கழகத்தின் பௌதீகவியல் துறைத்தலைவர் பேராசிரியர் க. கந்தசாமி தெரிவித்தார்.

யா/ஸ்கந்தவரோதயாக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமைகல்லூரியின் ஒறேற்றர் மண்டபத்தில் அதிபர் க. சிவாஜி தலைமையில் நடைபெற்றபோது பிரதம விருந்தினராக அதில் கலந்து கொண்டு பரிசளிப்பு பேருரையை நிகழ்த்தியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; எமது காலத்திலும் அதற்கு முந்திய காலத்திலும் கல்வியின் பிரதான நோக்கம் பண்புள்ள பரந்த நோக்கமுள்ள சமுதாயத்தை உருவாக்குவதாகவே இருந்தது.

பட்டம் பெறுவதும் அதன் மூலம் பதவிகளையும் வாழ்க்கை வசதிகளையும் பெற்றுக்கொள்வது அதற்கடுத்த நிலையில் இருந்தன.

இதனால் அக்காலத்து ஆசிரியர்களுக்கு மாணவர்களை நெறிப்படுத்தி அவர்களை சமுதாயத்தில் நல்ல பிரஜைகளாக்குவதில்எந்தவிதப்பிரச்சினையும் இருக்கவில்லை.

இன்று பெற்றோர்களும், ஆசிரியர்களும் மாணவர்கள் கல்வியில் உயர் பேறு பெறவேண்டும் என்பதிலேயே விருப்பம் உள்ளவர்களாக இருக்கின்றார்களே தவிர அவர்கள் குணசீலர்களாக இருக்கவேண்டும் என்பதில் கவலைப்படுபவர்களாக இல்லை.

பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் இந்த மாற்றத்தால் சமுதாயம் பண்புகுன்றியதாகவும் பரந்த நோக்கமற்றதாகவும் மாறுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்நிலையை தொடரவிட முடியாது. சுவர் இருந்தால் தான் சித்திரம் தீட்டலாம். பண்பற்ற சமுதாயம் பலமுள்ளதாக இருக்கமுடியாது பலமற்ற சமுதாயத்தில் பட்டதாரிகள் இருந்தால் கூட அதன் வீழ்ச்சியை தடுக்கமுடியாது. எனவே மாணவ சமுதாயத்தை நெறிப்படுத்தி சமுதாய வளர்ச்சியை ஏற்படுத்துதல் எல்லோரினதும் தலையாய கடமையாகும். இதில் பெற்றோரின் பங்குதான் மிகவும் அதிகமாகும்என்று குறிப்பிட்டார். (உ-207)

# அங்கத்துவம் வழங்கப்பட்டது

(தென்மராட்சி)

மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையம் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் அண்மையில் அங்கத்துவம் பெற்றுள்ளது.

இத்துடன், இணையத்தில் பத்துநிறுவனங்கள் இணைந்து செயற்பட்டு வருகின்றன. (உ-77)

# இளைஞன் சுட்டுக்கொலை

(மன்னார்)

மன்னார் உப்புக்குளப் பகுதியில்வீடொன்றினுள் புகுந்த இனம் தெரியாத துப்பாக்கிநபர்கள் மேற் கொண்டதுப்பாக்கிப்பிரயோகத்தில் வீட்டிலிருந்த ஒரு இளைஞர் பலியானதுடன் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம்அதிகாலை 1.30 மணியளவில்இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. (ந-4)

# அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திலுள்ள 1ஏபி, 1சி, தரம்2 ஆகிய வற்றைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் இன்று பி.ப.2.00மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தரம் 9 பொதுப் பரீட்சை மற்றும் பாடசாலைமட்டக்கணிபபீடு உட்பட பலவிடயங்கள்கலந்துரையாடப்படவுள்ளதாகவும், சம்பந்தப்பட்ட அதிபர்கள் தவறாது சமுகமளிக்குமாறும் வலிகாமம் வலயகல்விப்பணிப்பாளர்வி. இராசையாஅறிவித்துள்ளார். (உ-3)

# உன்னதமான மாணவப்பருவ காலத்தில்

# ஒழுக்கமும், புலனடக்கமும் மிக அவசியம்

## கொக்குவில் இந்துவின் பரிசளிப்பில் நீதிபதி வரதராஜா உரை

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டிலுள்ள பிரபல இந்து, கிறிஸ்தவப் பாடசாலைகள் சிலவற்றில் ஆசிரியர்களுக்குகாவலர்களை நியமிக்கவேண்டிய துர்ப்பாக்கியநிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது. இதனால் சமூகத்தில் அக்கல்லூரிகள் தலை குனிந்து நிற்கின்றன. ஆனால் தொண்ணூறுவருடகாலசீரிய பாரம்பரியங்களைக்கொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி என்றுமே ஒழுக்க, கலாசார விழுமியங்களில் சோடை போனவரலாறு கிடையாது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது முதன்மைவிருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி கே. பி. எஸ். வரதராஜா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கல்லூரி அதிபர் பொ. கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் நீதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில்;

வெற்றி தோல்விகளை நிர்ணயிப்பது ஒருசில புள்ளிகள் தான், எனவே பரிசில்பெறாத மாணவர்கள் கவலையுறத் தேவையில்லை; தாழ்வுமனப்பான்மையுடன் இருக்கத் தேவையில்லை பேட்டன்ரசல் என்ற அறிஞர் வெற்றியின் இரகசியம் பற்றிக் கூறுகையில் 'விவேகமான முறையில் சரியான முயற்சியுடன் திட்டமிட்டுப் பங்கு பற்றினால் நிச்சயமாக வெற்றிக்கனியை அடைந்தே தீருவீர்கள்' என்றார். எனவே எல்லா மாணவர்களும் இலட்சியப் பற்றோடு கற்க வேண்டும்.

மேலைத்தேய காலனித்துவ ஆட்சியின் முன்பு அதாவது கி. பி. 1500ற்கு முன் நமது நாட்டில் குருகுலம்அல்லது திண்ணைப்பள்ளிக்கல்வி முறையே இருந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட சமூக மாற்றத்தால் நல்ல தலைவன் இன்றி எமதுசமூகம் தலை குனிந்தது. அந்தநேரம் நல்லை ஆறுமுகநாவலர் பெருமான்இந்துப்பாடசாலைகளை உருவாக்கினார். இதனால் மிசனறிப் பாடசாலைகளோடு ஆரோக்கியமான தொரு போட்டிநிலவியது. ஆறுமுகநாவலர் சிறந்த ஆசிரியபரம்பரையையும்சிவபாதசுந்தரனார் உயரிய மாணவர் பரம்பரையையும் உருவாக்குவதில் முன்நின்று உழைத்தனர்.

இதன் மூலம் இந்து- கிறிஸ்தவ அதிபர்கள் தம்மை கல்விக்காக அர்ப்பணித்துச் செயற்படமுன்வந்தனர் அந்த வகையில் ஹண்டி பேரின்பநாயகம் இக் கல்லூரிக்கு ஒரு முகவரியை தேடிக்கொடுத்தார்.

மாணவப்பருவம் சுதந்திரமான, கவலைகள் அற்ற உன்னதமான காலம். இக்காலத்தில் கல்வியைக் கற்று அறிவதுடன் புலனடக்கம், ஒழுக்கம் என்கின்ற கேள்விமுறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும்.

மாணவர்களாகிய நீங்கள் சமூதாயத்தின நம்பிக்கைப் பொறுப்பானவர்களும் பயனாளிகளும் ஆகஇருப்பதால் தமிழ்ப் பாரம்பரியம் பல விழுதுகளை இம் மண்ணில் ஊன்ற உரம் கொடுக்க வேண்டும் என்றார்.

திருமதி தர்மாம்பிகை வரதராஜா பரிசில்களை வழங்கினார். பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் எஸ். சிறிகணேசன் நன்றியுரை கூறினார். [ந-106]

## மூதூரில் வீட்டின்மீது கைக் குண்டுத் தாக்குதல்

### சிறுமி பலி, 6 பேர் காயம்

திருகோணமலை மூதூர் பகுதியிலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஆறு வயதுச் சிறுமி பலியானதுடன் மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் அண்மையில், இடம் பெற்றுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் முஸ்லிம்- தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள மோதலின் எதிரொலியாக இச் சம்பவம்இடம்பெற்றுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது

இச்சம்பவத்தையடுத்து அப்பகுதிகளில் பதற்றம் மேலும் தொடர்வதால் தமிழ்- முஸ்லிம் மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி பொது இடங்களில் தஞ்சமடைந்துள்ளனர். (ந-4)

## சாயி சமித்தியில் இலவச வகுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவாநிலைய சேவைப் பகுதியினரால் இலவசவகுப்புகள்இளைஞர், யுவதிகளிடையே நடத்தப்படவுள்ளதாக நிலையசேவை இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலம், தையற்பயிற்சி, கைப்பணித் தொழிற்பயிற்சி என்பன இடம் பெறவுள்ளதாகவும் கற்கை நெறிகளைப் பயிலவிரும்புவோர்எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் சுய விபரங்களுடன் விண்ணப்பிக்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-104)

## பிரசாரக் கூட்டம்

(திருநெல்வேலி)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டமும் கருத்தரங்கும் இன்று வடமராட்சி ஐக்கிய தேசியக் கட்சிவேட்பாளர் சின்னத்துரை குலேந்திர ராஜாவின் மந்திகை இல்லத்தில் மு.ப.10.30மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-43)

## நிர்வாகசபைக் கூட்டம்

(ஏழாலை)

லங்கா சீமெந்து பொது தொழிலாளர் சங்க நிர்வாக சபைக் கூட்டம் இன்று மு.ப. 11.00 மணிக்கு இணுவில் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது. (செ-12)

# அரசாங்க அறிவித்தல்

## தேருநர் பதிவேடுகள் திருத்தம்-2001

1980 ஆம் ஆண்டின் 44ஆம் இலக்கத் தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின் படி 2001 ஆம் ஆண்டுக்குரிய தேருநர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது;

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள். | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள். |
| --- | --- |
| 2.1 மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்திற்குப் பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான தேருநர் பதிவேட்டுப் பிரதி; |
| 2.2 பிரதேச செயலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள தேருநர் பெயர்கள் அடங்கிய பதிவேட்டின் பாகங்கள்; |

(3) எதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் தேருநர் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள தேருநர் பதிவேட்டை அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாகத்தைப் பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்;

(4) தேருநர் பதிவேட்டை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லையெனக் காணும் ஒவ்வொருவரும் 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரை கீழ்க் காணும் முறையில் விடுவித்துக் கொள்ளலாம்.

4.1 இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப் படிவத்தில் 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்கு தங்கள் பகுதி கிராம உத்தியோகத்தர் ஊடாக எழுத்து மூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்யலாம். இதற்கான விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்;

4.2 பதியப்படுவதற்கான தகைமை பற்றி எல்லாத் தகவல்களையும் கிராம உத்தியோகத்தரினால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், கிராம உத்தியோகத்தரினால் கேட்கப்படும் ஏனைய விவரங்களைக் கொடுத்தும், இவ் விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கையளிக்கவும்.

(5) உங்களினால் கையளிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை, உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தர், தனது சிபார்சுடன் பதிவு அலுவலருக்கு அனுப்பி வைப்பார்.

**பதிவு அலுவலர்**
தேர்தல் மாவட்ட இலக்கம்-10
யாழ்ப்பாணம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.
2001-10-10

[G/2701]

## விண்ணப்பப் பத்திரம் - 2001

—————————— பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாக பதியும் அலுவலர், தேர்தல் அலுவலகம் யாழ்ப்பாணம்.

—————————— ஆகிய நான் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராக பதிவு செய்துகொள்ள இத்தால் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

(2) எனது விண்ணப்பத்தின் சார்பாக கீழ்க்காணும் விபரங்கள் தரப்படுகின்றன,

2.1 : முழுப்பெயர்: ——————————

2.2 : முகவரி: ——————————
——————————

2.3 ; பிறந்த திகதியும் வயதும் ; ——————————

2.4 ; 2001 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ம் திகதி மேற்படி முகவரியில் சாதாரண குடியிருப்பாளரா? ——————————

2.5 : பால் ; ——————————

2.6 ; இனம் : ——————————

2.7 ; பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் பிரஜாவுரிமைப் பத்திர இலக்கத்தினைக் குறிப்பிடுக, ——————————

2.8 : தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம் : ——————————

2.9 : கிராம உத்தியோகத்தரின் பிரிவு : ——————————

——————————
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ——————————

### கிராம உத்தியோகத்தரின் அறிக்கை

சிபார்சு செய்யப்படுகிறது/ செய்யப்படவில்லை. சிபார்சு செய்வதாயின் பின்வரும் விபரங்களை கிராம உத்தியோகத்தர் பூர்த்தி செய்தல் வேண்டும்,
வாக்கெடுப்பு பிரிவு : ——————————

வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் ; ——————————
வீட்டு இலக்கம் : ——————————
கிராமம்/ வீதி ; ——————————

——————————
கிராம உத்தியோகத்தரின் கையொப்பமும்
பிரிவின் இலக்கமும்

திகதி : ——————————

## இன்று ஒரு தகவல்

# நல்ல மருத்துவரின் நிலை

ஓர் ஊரில் மருத்துவர் ஒருவர் இருந்தார். அவர் ஏழை என்றும், செல்வன் என்றும் பாராமல் மருத்துவம் பார்த்து வந்தார்; தன்னைத் தேடிவரும் நோயாளிகள் பணம் தந்தால் வாங்கிக் கொள்வார். தராவிட்டாலும் கவலைப்பட மாட்டார்; ஆண்டுகள் ஓடின; முதுமை அடைந்த மருத்துவரால் பழையபடி ஓடியாடி வேலை பார்க்க முடியவில்லை. பலர் அவர் வீட்டிற்கே தேடி வந்தனர். ஒருநாள் நள்ளிரவுநேரம் மருத்துவர் வீட்டுக் கதவு தட்டப்பட்டது; ''ஐயா! கடும் வயிற்றுவலி நீங்கள் தான் மருந்து தரவேண்டும்'' என்று குரல் கேட்டது.

தூங்கிக்கொண்டிருந்த மருத்துவர் எப்படியோ தள்ளாடியபடி படுக்கையிலிருந்து எழுந்தார். நான் மருத்துவம் பார்ப்பதற்காகப் பணம் கொண்டு வந்திருக்கிறாயா? என்று அங்கிருந்தபடியே கேட்டார் மருத்துவர். '' எவ்வளவு செலவானாலும் தருகிறேன் என்று பதில் வந்தது. உன்னிடம் பணம் இருக்கிறது எந்த மருத்துவரிடம் வேண்டுமானாலும் உன் உடம்பைக் காட்டலாம். என் உடல் இருக்கும் நிலையில் உன்னைச்சோதித்து மருந்து தர இயலாது. ஏழையாக இருந்திருந்தால் என்னை விட்டால் உனக்கு வேறு மருத்துவர் கிடைக்கமாட்டார். என் உடல் நிலையைப் பொருட்படுத்தாமல் மருந்து தந்திருப்பேன். உன்நிலை அப்படி அல்ல, என்னைத் தொந்தரவு செய்யாதே வேறு மருத்துவரைப் பார்'' என்று சொல்லிவிட்டு மீண்டும் படுத்துக் கொண்டார் அவர். □

பேராசிரியர் எ. சோதி

# யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபடும்?

(தென்மராட்சி)

டிசம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கும் பாராளுமன்றப் பொதுத்தேர்தலை யாழ். மாவட்டத்தில் கண்காணிக்கும் பொறுப்பினை யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்கொள்ள வுள்ளது.

கொழும்பிலுள்ள அமைப்பு ஒன்றின் வேண்டுகோளின் பிரகாரமே இணையம் இந் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்பிரிவுகள் தோறும் அமைக்கப்படவுள்ள மொத்தம் 468 வாக்களிப்பு நிலையங்களிலும் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் இணையப்பிரதிநிதிகளும் உறுப்பினர்களும் ஈடுபடுவர் எனவும் அறியப்படுகின்றது.

அதேவேளை கொழும்பில் இருந்தும் சில பிரதிநிதிகள் மேற்படி பணிகளுக்காக வரவுள்ளனர். (உ-77)

## மின்சாரம் அடுத்த ஆண்டு

(அளவெட்டி)

அளவெட்டிப்பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கு 450 இலட்சம் ரூபா ஒதுக்க ஏற்பாடாக இருந்தபோதும், அப்பணி அடுத்தவருடமே சாத்தியமாகும் என்று தெரிவிக்கப்படுவதாகவும். அதுகுறித்து முற்போக்கு வாலிபர் சங்கத் தலைவர், சிவநாயகம் கருத்து வெளியிடுகையில்; மீளக்குடியமர்ந்து 6 வருடங்கள் கழித்தும் அளவெட்டிப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை.

நாம் மின்சாரம் பெறுவதற்கு பல மாதங்களாகக் கஷ்டப் பட்டுபலமுயற்சிகளை மேற்கொண்டும் எத்தகைய பயனும் கிடைக்கவில்லை இதனால் இப்பகுதி மக்கள் கஷ்டங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று குறிப்பிட்டார். (எ-237)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து மகளிர்கல்லூரி பசளிப்பு விழா நவம்பர் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசாலாட்சி மண்டபத்தில் நடைபெறவுள்ளது;

யாழ். வலயகல்விப் பணிப்பாளர் திருமதி செல்வராணி மகாலிங்கம் இவ் விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(எ-19,9)

## சோதனை தீவிரம்

(ஈச்சமோட்டை)

யாழ் நகரில் பாதுகாப்புப் படையினர் தமது சோதனை நடவடிக்கைகளை தீவிரப் படுத்தியுள்ளனர்.

கஸ்தூரியார்வீதி, வேம்படி வீதி மற்றும் நகரின் முக்கிய இடங்களில் பாதுகாப்பு படையினரின் சோதனைகள அதிகரிக்கப்பட்டுள்ளதோடு வீதியோர காவல் கடமைகளிலும் பெருந்தொகை படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், யாழ். பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதியும் பழம் வீதியும் சந்திக்கும பகுதிக்கண்மையில் புதிய காவலரணும் அமைக்கப்பட்டு வருகின்றது.

தேர்தல் பிரசாரங்கள் ஆரம்பித்துள்ள வேளையில் பாதுகாப்பும் தீவிரப்படுத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ.59)

## பரு. கடற் பிராந்தியம் வழமைக்கு திரும்பியது

(மந்திகை)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் வழமையான நடைமுறைகளின் பிரகாரம் எந்தவொரு கெடுபிடியும் இன்றி நேற்றையதினம் மீனவர்கள் தம்பணியை மேற் கொண்டமையை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, இராணுவத்தினரின் தேவைக்கென எரிபொருட்களை ஏற்றிவந்த எண்ணெய்க் கப்பல், பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து நேற்று முன்தினம் மாலை கடற் கரும்புலிகளால் தாக்கிய ழிக்கப்பட்டமை தெரிந்ததே. (உ-23)

## தொடர்பு கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்துடன் திருமதி மயிலன் நாகேஸ்வரி கோயிலாக்கண்டி கைதடி என்பவரை உடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது; (உ)

# மதுபோதையில் இருந்தவர் தற்கொலை முயற்சி

(மந்திகை)

மதுபோதையில் வீடு சென்றவர் உறவினர்களுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக தனக்குத் தானே மண்ணெண்ணெய்ஊற்றி தற்கொலை செய்ய முயற்சித்தசம்பவம் புலோலியில் இடம்பெற்றுள்ளது;

கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தில் கணபதி சந்திரதாசன் (வயது 35) என்பவரே எரிகாயங்களுக்குள்ளான நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (செ-23)

# பல்கலையில் இன்று சனாதனனின் ஓவியங்கள் வில்லைப் படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - விஞ்ஞான சங்கத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டில், யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறை, கலை வரலாற்று விரிவுரையாளரான தா. சனாதனனின் ஓவியங்களின் வில்லைப்பட க்காட்சி Slide Show of Paintings) இன்றுபி ப3-00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் இரா 3 சிவசந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படிநிகழ்வில் சனாதனனின் ஓவியங்கள் பற்றிய அறிமுக உரையை நுண்கலைத்துறைஉதவி விரிவுரையாளர் அகிலன்நிகழ்த்தவுள்ளார்;

மாணவர்கள், கலை ஆர்வலர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்கும்படி யாழ் விஞ்ஞான சங்க சமூக விஞ்ஞானப்பிரிவின் செயலாளர் திருமதி நா. செல்வநாயகம் அறிவித்துள்ளார், (உ)

# விஞ்ஞான போட்டி பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய கோட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட விவசாய விஞ்ஞானப் போட்டிப் பரீட்சைகளின் முடிவு வருமாறு;

யாழ். கல்வி வலயம்: சண்முக சுந்தரம் தனராஜி, 1ஆம் இடம்; பரியோவான் கல்லூரி,

விஜயகாந்தன் அரவிந்தன் - 2 ஆம இடம் பரியோவான் கல்லூரி, சிவபாதம் பிரிய தர்ஷன் - 3 ஆம் இடம், பரியோவான் கல்லூரி,

நல்லூர் கல்வி வலயம்; வி. கௌசல்யா- 1ஆம்இடம்- கொக்குவில் இந்துக் கல்லூரி, சி. நளினி - 2 ஆம் இடம்- கொக்குவில் இந்துக் கல்லூரி, செ ஐஸ்வரியா 3 ஆம் இடம் இந்து மகளிர் கல்லூரி,

கோப்பாய் கல்வி வலயம்; ம. துஸ்யந்தன்- 1 ஆம் இடம் ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாசாலை, கு. காண்டீபன்- 2ஆம்இடம், ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தியாசாலை, பா. சத்தியசீலன்- 3 ஆம் இடம் அச்சுவேலி மத்திய கல்லூரி, (எ-19,9)

# துரையப்பா ஸ்ரேடிய மனித புதைகுழி எச்சங்கள் யாழில் பரிசோதனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி எச்சங்கள் தொடர்பான பரிசோதனைகளை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்வதற்குரிய ஒழுங்குகளை யாழ் சட்டவைத்திய அதிகாரியையும் பொலிஸ் தலைமையக அதிகாரியையும் ஏற்பாடு செய்யுமாறு கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி ஆர். றுவான்புர கேட்டுள்ளார்:

கொழும்பு சட்டவைத்திய அதிகாரிகள் குழு யாழ்ப்பாணத்தில் தங்கிநின்று மனித எச்சங்கள் தொடர்பான பரிசோதனைகளை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது;

இதனால் அக்குழுவினர் யாழ்ப்பாணம் வருவதற்குரிய திகதி மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகள் தொடர்பாக டிசம்பர் மாதம் 3 ந் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ் சட்டவைத்திய அதிகாரிக்கும் யாழ் பொலிஸ் தலைமையக அதிகாரிக்கும் யாழ் நீதிமன்ற நீதவான் இ. தவிக்கினராஜா உத்தரவிட்டுள்ளார். (இ)

## அழுகிய நிலையில் சடலம் மீட்பு

(கொழும்பு)

மூதூருக்குத் தெற்கே நிலாப்பொல பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் கடந்த 25 ஆம் திகதி அழுகிய நிலையில் சடலம் ஒன்றினை மீட்டதாகவும்,

அது விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவருடைய சடலம் என்பது நிருபணமாகியிருப்பதாகவும் ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது; (உ)

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

சென்ற 28 ஆம் திகதி நாவலர் மண்டபத்தில் நடைபெற்ற மத்திய மாகாண அரச சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் நடப்புவருடஉத்தியோகத்தர் தெரிவில் தலைவராக ரீ. எஸ் இராஜேந்திரராவ், உபதலைவராக செல்வி பா. மதிவதனி, செயலாளராக இ. இரத்தினசிங்கம், துணைச் செயலாளராக ஆ. ஆனந்தராசா, பொருளாளராகத. தனபாலசிங்கம் ஆகியோரும் பத்து பேர் கொண்ட நிருவாகசபையும் தெரிவு செய்யப்பட்டது. (எ)

## சமூகச்சீர்கேடு ஒழிப்பு தினம்

(நீர்வேலி)

நவம்பர் 1ஆம் திகதிதொடக்கம் 7 ஆம் திகதிவரை யாழ். மாநகரசபையும் சுகாதார ஆணைக்குழுவும் இணைந்து சமூகச் சீர்கேடுகள் ஒழிப்பு தினத்தை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன;

பாடசாலைகள், கிராம சேவையாளர்கள் மட்டத்தில் இத்தினத்தையொட்டி பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கொலை, களவு, கற்பழிப்பு, கொள்ளைகள் முதலிய சமூகச் சீர்கேடுகளில் இருந்து மக்கள் ஈடேற்றம் பெறுவதற்கான வழிவகைகளை விளக்குவதாக மேற்படி நிகழ்வுகள் அமையும் என்று சம்பந்தப்பட்டோர் தெரிவித்துள்ளனர்; (எ-239)

# யாழ் வளங்கள் மூலம் இளைஞர் யுவதிகளுக்கு சுய தொழில் வாய்ப்பு

(துன்னாலை)

யாழ்ப்பாணத்தில் உள்ள இயற்கை வளங்களைப் பயன்படுதத்தி இளைஞர், யுவதிகளுக்கு சுய தொழில் வாய்ப்புககளைஏற்படுதத்திக் கொடுக்கப்போவதாக ஈ.பி.டி.பியின் உடுப்பிட்டித் தொகுதி வேட்பாளராகப் போட்டியிடும் திருமதி மகேஸ்வரி வேலாயுதம் புதிதாக அமைக்கப்பட்ட நெல்லியடிச் சந்தையின் கட்டடத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார் அண்மையில் கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை திருமதி மகேஸ்வரி வேலாயுதமும் சிவஸ்ரீ சட்டநாதக்குருக்களும் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்;

ஈ.பி.டி.பியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளரும் பருததித்துறை பிரதேச சபைத தலைவருமான ராசிக் பொதுச் சந்தையின் பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து கட்டடத்தை திறந்து வைததார்;

ஜெயராசாதனது தலைமை உரையில் பஸ்தரிபபுநிலையம் உளளடங்கலாக போக்குவரத்து நெருக்கடியில்இருந்த மரககறிச் சந்தை சிறபபாக அமைக்கப்படுள்ளதென்றும் மீன் சந்தைக்கு 15லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டதாகவும் தெரிவததார் சனசமூக நிலையங்கள், கோவில்கள விவசாய கழகம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் உரையாற்றினர்; (எ-41)

## சிந்தனைக்கு விருந்து

### தனிமையில் திளைப்பர்

முதியோர் தினத்தன்று மூத்தோரைப் போற்றி
அது முடிந்த மற்றைநாள் அந்த- முதியோர்
விளக்குமாற் றின்கதியை மேவியே மூலை
திளைப்பர் தனிமையிலே தாம்.

'பழையவன்'

# அமெரிக்க தாக்குதலில் ஆப். மக்கள் பாதிப்படைவதை தவிர்க்க வேண்டும்

## புஷ்ஷிடம் ஐ. நா. அகதிகள் நிறுவனம் கோரிக்கை

(லண்டன்)

ஆப்கானிஸ்தான் மீது நடத்தப்படும் தாக்குதல்களின் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென அமெரிக்க ஜனாதிபதியிடம் ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனத்தின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தாக்குதல்களின் காரணமாக ஆப்கான் பொதுமக்கள் அகதிகளாகி பாகிஸ்தான் எல்லையில் காத்துக்கிடக்கின்றனர். ஆனால் பாகிஸ்தான் எல்லையை மூடிவைத்துள்ளது. இதனால் அவர்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

எனவே பாகிஸ்தான் எல்லையைத் திறந்து குறித்தளவு அகதிகளையாவது உள்வர அனுமதிக்க வேண்டுமெனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, மேலும் அகதிகளை ஏற்றுக்கொள்ள தன்னால் இயலாது என பாகிஸ்தான் தெரிவித்துள்ளதால் ஆப்கான் அகதிகளின் நிலை தர்ம சங்கடத்திற்குள்ளாகியுள்ளதாக கூறப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் மக்களின் துன்பங்களைக் குறைக்கும் வகையில் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஐ. நா. சபையின் அங்கத்துவ நாடுகள் முன்வர வேண்டுமென அவர் மேலும் கேட்டுள்ளார். (உ-5)

# சட்ட விரோதமாக மெக்ஸிக்கோ சென்ற இலங்கையர்கள் கைது

(மெக்ஸிக்கோ)

அமெரிக்கமெக்ஸிக்கோ எல்லைப்புறத்தில் இலங்கையைச் சேர்ந்த 21 சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் கடந்த சனிக்கிழமை 16 பேரும் ஞாயிற்றுக்கிழமை 5 பேரும் இவ்விடத்தைச் சென்றடைந்தனர்.

இவர்கள் இலங்கையிலிருந்து விமானம் மூலம் ஜோர்டான் வந்தடைந்ததாகவும், பின்னர் அங்கிருந்து கப்பல் மூலம் மெக்ஸிக்கோ வந்ததாகவும், தாம் ஒவ்வொருவரும் 31 ஆயிரம் டொலர் பயணக்கட்டணமாக செலுத்தியதாகவும் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் அமெரிக்காவில் தொடர்ந்தும் தங்கி இருப்பதற்கு உரிமை கொண்டவர்களா என்பது பற்றி குடிவரவு திணைக்களம் விசாரணைகளை நடத்தும் என்றும் அந்த அதிகாரிகள் மேலும் கூறியுள்ளனர். (செ-2)

# இலங்கை அணியிடம் சிம்பாவே தோற்றது

(சார்ஜா)

'சார்ஜா' வில் நடைபெற்று வரும் மூன்று நாடுகள் பங்குபற்றும் ஒரு நாள் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இலங்கை, சிம்பாவே அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி 79 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.4 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 250 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பாக மஹேல ஜெயவர்த்தன 63 ஓட்டங்களையும் ரசல் ஆனோல்ட் 55 ஓட்டங்களையும் பெற்றனர். பதிலிற்குத் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 50 ஓவர்களில் எட்டு விக்கெட் இழப்பிற்கு 171 ஓட்டங்களைப் பெற்றது. (உ-2)

உலக தரிசனம்

# அமெரிக்க தபால் சேவைக்கு எதிராக வழக்குகள் தாக்கல்

(வாஷிங்டன்)

அமெரிக்க நியூயோர்க் மாநிலத்தில், கடிதங்களை தரம்பிரிக்கும் 'மோகன் சென்ரல்' என்ற தபாலக கட்டடத்தை அந்திரெக்ஸ் பக்ரீறியா முற்றாக சுத்திகரிக்கப்படும்வரை மூடிவைக்கும்படி கோரி மாநில தபால் ஊழியர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

குறிப்பிட்ட இந்த தபால் தரம்பிரிக்கும் நிலையத்திலிருந்தே எ. பி சி. என். பி சி. நியூயோர்க் போஸ்ட் ஆகிய மூன்று ஊடக நிறுவனங்களுக்கும் அந்திரெக்ஸ் துகள்களுடன்கூடிய கடிதங்கள் அனுப்பப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, தபால் ஊழியர்களுக்கு பாதுகாப்பு முகமூடிகள், கையுறைகள் என்பன வழங்கப்பட வேண்டும் எனக்கோரி அமெரிக்க தபால் சேவைக்கு எதிராக மற்றொரு வழக்கும் தொடரப்பட்டுள்ளது. (உ-2)

## இலங்கையணி எதிர்த்தாடும் அணிகள்

(சியோல்)

2003ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித்தொடரில் இலங்கை அணி எதிர்த்தாடவுள்ள அணிகள் விபரம் வருமாறு,

2003 பெப்ரவரி 10 நியூசிலாந்து அணி, பெப்ரவரி 14 பங்களாதேஷ் அணி, பெப்ரவரி 19 கனடா அணி, பெப்ரவரி 24 கென்யா அணி, பெப்ரவரி 28 மேற்கிந்தியத் தீவுகள் அணி, மார்ச் 03 தென்னாபிரிக்க அணி. (உ- 2)

# பாக். அணுவாயுதங்கள் கிளர்ச்சியாளர் கையில் சிக்காதிருக்க நடவடிக்கை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் முஷாரப் பதவி இழக்கும் பட்சத்தில் பாகிஸ்தானின் அணுவாயுதங்களை கிளர்ச்சியாளர்கள் கையில் சிக்காமல் காப்பாற்ற அமெரிக்கஇராணுவம் இஸ்லாமபாத்தின் அணு ஆயுதங்களை தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ள ஆயத்தம் செய்து வருகின்றது.

இந்தவகையில் முஷாரப் திடீர் புரட்சியில் ஆட்சி இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டால் அணு ஆயுதங்களை பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் செல்லும் பொருட்டு அமெரிக்க சிறப்புப் படைப்பிரிவு இஸ்ரேலியக் கொமாண்டோக்களுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டு வருவதாக நியூயோர்க் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானிடம் இடைத்தொலைவு ஏவுகணைகள் மற்றும் எவ்-16 விமானத்தின் மூலம் போடக்கூடிய அணு ஆயுதங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பாகிஸ்தான் அணு ஆயுதங்களை இவ்வாறான நிலை ஏற்பட்டால் ஹெலி மூலம் எடுத்துச் செல்வது அல்லது அவற்றை வெடிக்கச் செய்யும் கருவிகளை அழிப்பது அல்லது அணு ஆயுதங்களை ஒட்டுமொத்தமாக பாதுகாப்பாக அழிப்பது என்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது. (உ-2)

# கடலில் மூழ்க விருந்த படகை அவுஸ்திரேலிய கடற்படையினர் காப்பாற்றினர்

சட்டவிரோத குடியேற்றக்காரர் 229 பேர் மற்றும் 5 மாலுமிகள் பயணம் செய்த படகொன்று அவுஸ்திரேலிய கிறிஸ்மஸ் தீவுக்கு அப்பால் கடலில்மூழ்க இருந்தவேளை, அவுஸ்திரேலிய கடற்படையினரால் காப்பாற்றப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவில் இருந்து புறப்பட்ட இந்தப் படகு நீண்ட கடற்பயணத்திற்கு உகந்ததில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில வாரங்களுக்கு முன் சட்டவிரோத குடியேற்றக் காரர் சென்ற படகு மூழ்கியதில 300 பேரிற்கு மேல் கொல்லப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (உ-2)

# பயங்கரவாதத்திற்கு எதிரான போரைத் தொடர இந்திய ஜேர்மன் நாடுகள் இணக்கம்

(புதுடில்லி)

பயங்கரவாதத்திற்கு எதிரான போரை, தர்க்கரீதியான முடிவு வரும் வரை தொடர வேண்டும் என்று ஜேர்மனும் இந்தியாவும் ஒப்புக் கொண்டுள்ளன.

ஜேர்மன் பிரதமர் ஜெனரல் சோடர் இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச்சந்தித்துபுதுடில்லியில பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் பத்திரிகையாளர்களுக்கு விடுத்த செய்தியில் இருவரும் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

பயங்கரவாதத்தைத் தூண்டி விடும், ஒவ்வொரு நாட்டையும, ஒவ்வொரு ஸ்தாபனத்தையும் எதிர்கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும என்று இரு நாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளன.

ஆப்கானிஸ்தானில் தலிபானின் வீழ்ச்சிக்குப் பிறகு அமையும் அரசு விரிவான அடிப்படையில் அமைய வேண்டும் என்றும் தெரிவித்துள்ளன. (து)

# ஐ. ஆர். ஏ. இயக்க வழியில் ஆயுதப்போராட்டத்தைக் கைவிட ஜேட்டா அமைப்பும் இணக்கம்

(மற்றிட்)

தனிநாடுகோரி ஐரோப்பிய நிலப்பரப்பில் போராடி வரும் ஒரே அமைப்பான பாஸ்ட்இனஜேட்டாஅமைப்பு ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு அரசியல் ரீதியாக போராடப் போவதாக அறிவித்துள்ளது.

பிரான்ஸ், ஸ்பெயின் நாடுகளில் தனி நாடுகோரி போராட்டத்தில் ஈடுபட்டு வந்த மேற்படி பாஸ்ட்இன மக்கள், அயர்லாந்தில் ஐ. ஆர். ஏ. இயக்கம் ஆயுதங்களை கைவிடுவதாக அறிவித்ததைத் தொடர்ந்து போராட்டத்தை கைவிட வேண்டும் என்றபலரின் கோரிக்கைக்கு இணங்கி இம்முடிவை அறிவித்துள்ளது.

தம் பிரச்சினைமக்களாட்சி முறையில் தீர்க்கப்படலாம் என்றும் அமைதியை தாம் விரும்புவதாகவும், எனினும் பாஸ்ட் இன சுயநிர்ணயம் என்பதை தவிர்ப்பதாக அமையாது என்றும் இந்த அமைப்பு தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது. (உ-2)

# மத்திய கிழக்கு வன்முறைகள் தொடர்பாக பாப்பரசர் கவலை

[ரோம்]

மத்திய கிழக்கு விவகாரம் முடிவின்றி தொடர்வது குறித்து பரிசுத்த பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் பெரும் கவலை வெளியிட்டுள்ளார்.

பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தை சந்தித்துப்பேசிய பரிசுத்த பாப்பரசர் இஸ்ரேலியர்களும் பலஸ்தீனர்களும் தமது ஆயுதங்களை கைவிட்டு சமாதானப் பேச்சுக்குமுன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளே ஐரோப்பியநாடுகளுக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றைமேற்கொண்டுள்ள யஸீர் அரபாத்பலஸ்தீனப் பகுதிக்குள் நிலை கொண்டுள்ள இஸ்ரேலியர்கள் முற்றாக வாபஸ்பெற வேண்டுமென்று அழுத்தம் கொடுத்து வருவதுடன், பயங்கரவாதத்தை தான் எதிர்ப்பதாகவும் கூறியுள்ளார்.

அரபாத்திற்கும் பாப்பரசருக்கும் இடையில் இடம் பெற்ற 15 நிமிட பேச்சின் போது இருதரப்பிற்கும் இடையே பேசப்பட்ட இன்னும் சில முக்கிய தகவல்கள் வெளியாக வில்லை என்றும் அவை இன்னும் ஓரிரு நாட்களில் வெளியாகும் என்றும் செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன. [உ-7]

# தீவிரவாதிகள் நுழைவதைத் தடுக்க புஷ் நிர்வாகம் புதிய திட்டம்

(வாஷிங்டன்)

குடிவரவுக் கொள்கைகளை தீவிரப்படுத்துவதன் மூலம், தீவிரவாதிகள அமெரிக்காவிற்குள் நுழைவதைத் தடுப்பதற்கான திட்டம் ஒன்றை புஷ் நிர்வாகம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்புப் பேரவையின் முதலாவது கூட்டத்திலேயே புதிய திட்டம் பற்றிய அறிவிப்பை ஜனாதிபதி புஷ்வெளியிட்டார்.

இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கவெளிநாட்டுத் தீவிரவாதிகளை கண்டறியும் செயலணிப் படையினர் என்ற பெயரில் புதிய கண்காணிப்புப் படை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 11 இல் அமெரிக்க நகரங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தற்கொலை விமானத்தாக்குதலுடன் சம்பந்தப்பட்டவர்களில் 19 பேரில், ஒன்பது பேர் சட்டரீதியாக அமெரிக்காவில் இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டமையும் இவர்களில் சிலர் மாணவர் விசாக்கள் மூலம் அமெரிக்கா வந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டதை யடுத்து அமெரிக்காவின் குடிவரவுக் கொள்கை மிகுந்த கண்டனத்திற்கு உள்ளானது தெரிந்ததே.

இவற்றைக் கருத்திற்கொண்டு அமெரிக்காவில் மாணவர் விசாக்களைப்பெற விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்கள் தீவிரவிசாரணைக்கு உட்படுத்தப்படுவதுடன் அவர்கள் உண்மையிலேயே கல்வியைத் தொடரும் நோக்கத்துடன் தான் அமெரிக்காவிற்கு வருகிறார்களா என்பதை புதிய செயலணிப் படையினர் கண்காணிக்க உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது (உ-2)

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக் குப்பட்டு
குறள்

## வலம்புரி

### அதிரடி அறிக்கைகள்

பொதுத் தேர்தல் பிரசாரங்களில் அரசியல்கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும்களம்புகுந்துள்ளன.

போர்க்களத்தில் குண்டு மழை பொழியுமெனில், தேர்தல் களத்தில், வாய் (வசை) மொழி பேசும். இதுவே தேர்தல் காலச் சூழ்நிலை ஆனால் யாழ்ப்பாணத்தில் மேடை போட்டு, மார் தட்டி, பேச்சாளர் பீரங்கிகளை நிறுத்தி மாலையிட்டு, பேசும்முறை மறைந்துபல வருடங்களாச்சு.

யாழ்ப்பாணத்தில் தேர்தலில் போட்டியிடுவதாயின் வேட்பாளர்கள் உயிர்பற்றற்றவராகஇருப்பது மிகமிக அவசியம். உயிர் மீதும் பதவி மீதும் ஒரே நேரத்தில் ஆசை கொள்வது அறிவார் தொழிலன்று. இதன் காரணமாக அரசியலவாதிகள், மேடைப் பேச்சைத் துறந்து, வீடுகளுக்குச் சென்று கரம் கூப்புவதை விடுத்து மறைந்திருந்து எழுத்துருவில் பிரசாரம் செய்வதும் பத்திரிகையாளர் மாநாடுகளை வைப்பதையும் தவிர வேறு வழியில்லை.

இதனால் அனல் பறக்கும் வகையில் அடுக்கு மொழிகளில் அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுபழையன வற்றை நினைவுபடுத்தி நீர் ஓரடி பாய்ந்தால் நான் ஈரடி பாய்வேன் எனப் பக்கம்பக்கமாக வசை பாடப்படுகிறது. இதனால் பத்திரிகையாளர்பாடுபெரும்திண்டாட்டமே. எனினும் இலங்கையின் யுத்தத்தை இத்தனை ஆண்டுகள் நீடித்த 'பெருமையில் பத்திரிகைகளுககுப் பெரும் பங்குண்டல்லவா? ஆதலால் அறிக்கைகள் ஆரோகணத்தில், இருந்தாலென்ன, அவரோகணத்தில் இருந்தாலென்ன அதன் விளைவுகளைக் கருதாது பத்திரிகைகள் பிரசுரிக்கின்றன.

அரசியல் கட்சிகளின் அறிக்கையைப் பிரசுரிப்பது முக்கியம் என்பதை ஏற்றுக் கொண்டாலும் அவர் மாறி இவர், இவர் மாறி அவர் என அறிக்கைகளைப் போட்டி போட்டுக் கொண்டு எழுதும் போது, பொதுத்தேர்தல் நடைபெறும் டிசம்பர் 5ந் திகதி வரை மாறி மாறி அறிககைகளைப் பிரசுரிப்பதே பத்திரிகையின் தொழிலாகி விடும் போல் தெரிகிறது.

# தரமான கல்விக்குத் தகைமையுடைய ஆசிரியர் பயிற்சியும், சேவையும் விரிவடைய வேண்டும்

பா. தனபாலன்
உப பீடாதிபதி
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி.

சர்வதேசக் கல்வியகமும் யுனெஸ்கோ நிறுவனமும் ஒவ்வொரு வருடமும் ஆசிரியர் தினத்திற்குதொனிப்பொருட்களைத தெரிவு செய்து அது தொடர்பான செயறதிட்டங்களை மேற்கொளவது வழக்கம். இவ்வருட ஆசிரிய தினத்திற்கான பதானிப பொருள 'தரமான கல்விக்கு தகைமையுடைய ஆசிரியர்' என்பதாகும். இதறகேறப உலகின் சகல பாகங்களிலுமுள்ள ஆசிரியா கல்வி பயிறுநர்களும, திட்டமிடுவோரும ஆசிரியா கல்வியின் சகலமுனைகளிலும் புத்தாக்கங்களை (Innovative) ஆர்வத்துடன் மேற்கொண்டு வருகின்றனர். விரிந்து வரும் வாழ்க்கை, கல்வித தேவைகளை, சவால்களை எதிர் கொளள பழைய கற்பித்தல் முறைகள் போதியனவல்ல. ஒரு தொடராகத் தோற்றம் பெற்ற புதிய கல்வி அணுகு முறைகள 'போதனா முறை தொழில் நுணுக்கவியல்' என்ற பொதுப பெயரினால் தற்போது அழைக்கப்படுகின்றன.

### கட்டுறுப்பயில்வு

பாரமபரிய கற்பித்தல் போக்குகளின் நெகிழ்ச்சியற்ற தன்மைகளைத் தளர்த்துவதற்கான ஒரு முயற்சியாகவே இவை இன்று தோற்றம் பெறுகின்றன. இத் தொழில் நுணுக்கவியலினூடாக பாடசாலைக் கல்வித்தர உயர்வுக்குப் பல வழிகள் காணப்படுகின்றன. வேறுபட்ட கல்விச் சாதனங்களின் பயன்பாடு, சூழ்நிலைகேற்ற தெரிவுகள, புதிய வடிவமைபபுகள், கணிப்பீடு, மகிழ்ச்சிகரமான கற்றல சூழல், கற்கக்கற்றல் தேர்ச்சி என்பவற்றினூடாகப் புத்தாக்கங்கள் மேறகொள்ளப்படுகின்றன. இவற்றை யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி முதலாவது அணி ஆசிரிய மாணவர்கள இடையிட்ட கற்பித்தல் பரீட்சியம் (Block Teaching), கட்டுறுப் பயிலவு (Internship) செயன் முறைகளிலும பிரயோகிக்க வழிகாட்டப்படுகின்றனர். இதற்குக்கல்வித்துறை சார்ந்த அனைவரின் ஆதரவும் தேவை.

### யாழ்பாடசாலைகளில் கட்டுறுப்பயில்வு

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் இரு வருட உள்ளகப் பயிற்சியை நிறைவேற்றியவர்களுக்கு மூன்றாவது வருடம் கட்டுறுப்பயிற்சி வழங்கப்படுகின்றது இது மிகமுக்கியமான பயிற்சியாகும் 2002 ஜனவரியில் பொருத்தமான பாடசாலைகளில் இணைக்கப்படும் ஆசிரிய பயிலுநர்கள் வகுப்பறைக்கற்பித்தலில் பூரணமாக ஈடுபட பின்வரும் விடயங்கள் உதவும்.

1. மிக முக்கியமாகபாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் கட்டுறுப் பயிற்சியாளரைப் பயன்படுத்துவது தவறானதாகும்.

2. குறித்த பாடசாலை வகுப்பின் சிரேஷ்ட நல்லாசிரியரின் முழுமையான வழிகாட்டல், ஆதரவு இவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

3. அதிபர்கள் இதற்கான முறையான கரிசனையுடன் வழிகாட்டல்களை மேற்கொண்டு உகந்த கற்பித்தல் சூழலைஉருவாக்கிக்கொடுக்க வேண்டும்.

4. மேற்பார்வையாளர்கள் கல்விப்பணிப்பாளர்கள் எதிர்கால நல்லாசிரியர்களை உருவாக்கும். இம் மேலான பணிக்கு உதவிகளையும், ஒத்துழைப்புக்களையும் வழங்க வேண்டும்.

5. பாடசாலைக் கற்றல்-கற்பித்தலைவினைத்திறனாக்குதல் தொடர்பான செயற்திட்டங்கள், ஒப்படைகள், செயற்பாட்டு ஆய்வுகள் என்பவைக்குக் கூடுதல் முக்கியத்துவமளித்தல், செயற்பாட்டு ஆய்வுகளினூடாக இனம் காணப்படடவகுப்பறைக் கற்றல்-கற்பித்தல் பிரச்சினைகளைத் தீர்க்க செயற்திட்டங்களை அமுலாக்க ஒத்துழைப்பு வழங்கி ஏட்டளவிலான ஆய்வாக இல்லாமல் பயன்பாடுடைய ஆய்வாக அமைக்க உதவுதல்.

6. ஆசிரிய பயிலுநர் உரிய முறையில் பயிற்சி பெறுதலுடன் அவர் மேலும்வகுப்பறை முகாமைத்துவப நவீன கல்வித் தொழில்நுட்பம் தொடர்பான கற்றலை பாடசாலையிலேயே மேற்கொள்ள நூலக வசதி, கணனி வசதிகளையளித்தல்.

7. தொடர்ச்சியான உதவும் நோக்குடைய பயனுறுதி வாய்ந்த மேற்பார்வை முறைமையை அமுல்படுத்தி ஆசிரியப் பயிலுநர்களுக்கு மதிப்பும், கணிபபும் கொடுத்து ஊக்குவித்தல்.

8. முறைசார், முறைசாரா முறையில் பாடவிதானச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்து அமுலாக்கி அனுபவங்களை வழங்குதல்.

9. கல்வி உயர்கல்வியமைச்சு, பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம், மாகாணக்கல்வியமைச்சு, வலய கோட்டக்கல்வி அலுவலகத்தினர், பாடசாலைகள, சமூகத்துடனும் தேசியக்கல்வியியற் கல்லூரி உயிர்த்துடிப்பான நல்லாரோக்கியமான உறவுகளைபேணல்சமூகநலன்கருதி அனைத்துத்தரப்பினரும் ஒத்துழைத்தல்.

10. பொது நிறுவனங்கள் தொடர்பு சாதனங்கள், சமூகத்தினர் பல்வேறுஉதவிகளை வழங்குதல்.

எமது பிரதேசத்தில் சூழ்நிலையின் கோளாறுகளால் கல்வி, கலாசார, பண்பாட்டு அம்சங்களில் சரிவும் சமூகப் பற்றற்ற சுயநலனுக்காக எதையும் செய்யும் இழி நிலையும் பெருகி வருகின்றது இந் நிலையிலிருந்து சமூகத்தை வழுப்படுத்தும் பொறுப்பு பாடசாலைகளையே சார்ந்துள்ளது. இதற்கு முதலில் பாடசாலைகளில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் கொண்ட மாணவசமூகத்தைஏற்படுத்த ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு மிக அவசியம் அவ்வகையில் புதிய ஆசிரியர்களாக வார்க்கப்படவுள்ள ஆசிரிய மாணவர்களின் கட்டுறுப்பயிற்சிக்கு அனைத்துச் சமூகத்தினரும ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

### பிரித்தானிய முன்மாதிரி

பிரித்தானிய கல்வியியல் கல்லூரிகளில் கட்டுறு ஆசிரியர் பயிற்சி வழங்குதல் தொடர்பான அண்மைய ஆய்வுகளினூடுபலசெயற்திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன. இவற்றில் எமக்குப்பயனுள விடயங்களை முன்னெடுத்தல் அவசியமாகும். அங்கு ஆசிரியர் கட்டுறுப்பயிற்சியில் பங்காளிகள் (Partnership) முறைமையைப் புதிதாக அறிமுகம்செய்துள்ளனர். இம் முறையில் குறித்த பாடசாலை வகுப்பறையில் சிறந்த சேவைத்தரமுடைய முழுநேர ஆசிரியரும் (Mentor) இருப்பார். இவர் பயிலுநருக்கு மேற்பார்வையாளராக அல்லாமல்பங்காளியாக உதவுவார். இது மிகவும் வினைத்திறன் கூடிய முறையாகவுளது செயற்பாட்டு ஆய்வு செயற்திட்டங்களுக்கு மிகுந்த முன்னுரிமையும் கொடுக்கப்படுகின்றது. பங்காளிகளின் வழி காட்டல் என்ற வகையில் அதிகாரம். பலாத்காரம், நெகிழ்ச்சியற்ற தன்மை அகற்றப்பட்டு புரிந்துணர்வு, உதவுதல். பிரச்சினைகளைச் சேர்ந்துதீர்த்தல்' வழிகாட்டுதல், நட்புறவு புதிய அனுபவங்கள் என்பனவற்றினூடாக உயர்ந்தபயனுறுதி இறுதியாகக்கிடைப்பதை ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுகின்றனர்.

### கற்றல் முரண்பாடுகளில் இருந்து விடுதலை

இன்று கூட எமது நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பொருந்தமறறதாய் இறுதிப்பரீட்சை ஒன்றே தனி இலக்காகக் கொண்ட மிகப் பழைய கல்வி முறைமையே தொடர்கிறது. அப்பரீட்சை கடும் தெரிவு, போட்டிஎன்பன சார்ந்ததால் மனப்பாடம் செய்து கற்கும் மனோபாவம் உளளது. இது ஆசிரிய மாணவர்களின் கல்வி பற்றிய நோககை பிறழ்வாக இட்டுச் செல்ல ஏதுவாகின்றது. கல்வியானது மாற்றங்கள அற்ற உறுதியாக ஏற்றுக்கொள்ளப் பட்ட அறிவுத் தொகுதியை உருவாக்குதல என்றநிலைக்கு இட்டுச் செல்கின்றது. இம முறையால் வாழுநாட் கல்விக்கு அர்த்தமற்றுப் போய் விடுகின்றது.

அறிவைமட்டும் வழங்குவது ஆசிரியரது பொறுப்பு என்பது தொடர்ந்து ஏற்றுக் கொள்ள முடியாததொனறாகும். இது இன்றைய சமூக அமைபபில் காணப்படும் முரண்பாடுகளில் ஒன்றாகவும் உள்ளது. கல்வியால் ஏற்படும் மாற்றத்தை மாணவன் புரிந்து கொளள வழிநடத்துவதோடு. மாற்றங்களை ஏற்றுக்கொள்வதற்கான ஆற்றல்களைப் பெற பயிற்சியளித்தலும் முக்கியமானதாகும். மாறும் இந்த உலகில், புதிய அறிவு தொடர்ச்சியாக உருவாகிவரும் ஒன்றாகையால் முன்பு பெற்ற அறிவின் கூறுகள் நிலையான மதிப்பைப் பெற முடியாத நிலைகளும் உளளன. முன்பு ஏற்றுக் கொண்ட கோட்பாடுகளும், எண்ணக்கருக்களும் தொடர்ச்சியாக மீள் மதிப்பீடு செய்யப்படவேண்டும்.

சரியான விடைகளை வழங்குவதற்குப்பதிலாக, பொருத்தமான வினாக்களை எழுப்பும் ஆற்றலை வளர்க்க வேண்டும். கற்றல் பிரச்சினைகளை இவ்வாறு நோக்கும் போது கற்றல் முரண்பாடுகளில் இருந்து விடுதலை பெறலாம். இதற்கான வழிகாட்டல்களை ஆசிரிய மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும். அதனமூலம் தகைமையுடைய ஆசிரியர்களை உருவாக்கி தரமான கல்விக்கு வழி செய்யலாம். தரமான கலவியை வழங்குவோருக்கு பேராசிரியர்கள் கெலின் பியுஸ்ரின் ஆகியோர்' தற்போது 'விருப்புடன் நடுவராக இருநது தலையிடும்'' கற்பித்தல நவீன அணுகு முறையை உருவாககியுள்ளனர்.

### விருப்புநோக்குடனான நடுவர்

ஆசிரியரினதும் மாணவனினதும் கவனமும், எண்ணமும ஒருங்கிணையும் போது நலமான அனுசரணை அல்லது தலையீடு உருவாகிவிடும்; இந்நிலையில் ஆசிரியரின் கலவி நோககம் நிறைவேறி விடும். மாணவனும் தன் கவனத்தை ஆசிரியா பால திருப்புவான். இவ்வாறாக ஆசிரியரின் எண்ணமும்; மனவுறுதியும் கற்றல நோக்கில்மாணவனுடன் பரிமாறிக் கொள்ளும் தன்மை சங்கமமாகும் போது சிறந்த கற்றல் நிகழ்கின்றது. இதுவே ஆசிரியர் விருப்பு நோக்குடன்நடுவராகத்தலையிடல் எனறகற்பித்தல் முறை

(2-ம் பக்கம் பார்க்க)

### சாயி அருளமுதம்



கடவுளே பாதுகாவலராகவும், திருத்துபவராகவும், கண்டிப்பவராகவும், இரட்சகராகவும் விளங்குகிறார். ஆகவே, மக்கள் கடவுளை உயிருள்ள ஸ்வரூபமாக உணர்ந்து அவரை அழைக்கும் பழக்கத்தைஏற்படுததிக் கொள்ள வேண்டும். இதயங்களை இளகச் செய்வதற்கு ஆலயம் உதவுகின்றது. இரக்கம், தர்ம குணம் என்னும் நற்குணங்களை அது மனத்திற் பதிய வைக்கும். கடவுள் மீதுபக்தியும், ஆராதனையும் இல்லாத ஒரு சூழ் நிலையில் பேராசையும், கொடுமையும் பரவியிருக்கும். நடமாடும் கோவில்களாக உங்களை ஆக்கிக் கொள்ளுங்கள். உங்களில் வதியும் கடவுளை அறிந்து கொள்ளுங்கள். உங்களை இரட்சிப்பவரும், உங்களுக்கு வேண்டியவற்றை ஏற்படுத்திக் கொடுப்பவரும் அழிவுக்குச் சார்பாயுள்ளவற்றிற்குநீங்கள் இரையாகாமல தடுப்பவரும் அவரே.

நன்றி
**நாளாந்த நற்சிந்தனை**

# மக்கள்மன அரங்கமே ஈ.பி.டி.பி. யின் முகாம் - பதில்அறிக்கையில் தெரிவிப்பு

அரசியல் பொது வாழ்வு என்பது வியாபாரம் அல்ல அர்ப்பணிப்பான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காகப் பாடுபடுவது என்பது மொத்த வியாபாரம் அல்ல. ஈ.பி.டி.பி யினரான நாங்கள்பட்டங்கள் பதவிகள் பெற்றுக்கொண்ட பின்னர் அரசியலில் ஈடுபட்டவர்கள் அல்லர். யாழ்ப்பாண மாவட்டத்தில் ஐ.தே.கவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான மகேஸ்வரன் அவர்களுக்கு இது தெரியாது அல்ல எனினும் தமது வர்த்தக சாம்ராஜ்யத்தை விரிவுபடுத்திக்கொளவதற்காக அரசியலில் ஈடுபாடு கொண்டஅவர் பதவியைத் தக்க வைப்பதற்கான வாக்குவேட்டையில் எங்கள் மீது மாசு கற்பிக்க முனைவது விசமத்தனமானது.

ஈ.பி.டி.பி. யை ஸ்ரீதர் திரையரங்கிலிருந்து அகற்ற வேண்டும் என்பதற்காகத் தான் தேர்தலில் போட்டியிடுவதுபோல அவர் கருத்துத் தெரிவித்திருப்பது நகைப்பிற்கு இடமானது ஏனெனில் ஈ.பி.டி.பி.யின் ஆதரவுத் தளம் என்பது ஸ்ரீதர் திரையரங்கம் அல்ல. மாறாக மக்களின் மன அரங்கில் தான் ஈ.பி.டி.பி முகாம் அமைந்துள்ளது. மக்கள் முகத்தில் மலரும் புன்னகைதான் ஈ.பி.டி.பியின் பாதுகாப்பு அரண்கள்மக்கள்வாயார வாழ்த்தும் வாய்மொழிகள் தான் ஈ.பி.டி.பி.யின் கேடயங்கள் மக்களின் உள்ளந்தான் ஈ.பி.டி.பியின் சிம்மாசனம்.

இது மகேஸ்வரன் போன்ற அரசியலரங்கத்தின் புதுவரவுகள் தெரிந்துகொள்ளவேண்டியபாடங்களாகும் ஆனால் கள்ளக் கையெழுத்துபோட்டு பணம்சம்பாதிக்கும் கனவான்களுக்கு பாடம் கற்க நேரம் இருப்பதில்லை சோடாப் போத்தல்களில் திருட்டுத்தனமாக எரிபொருள் கடத்திக் கொள்ளைலாபம் சம்பாதித்துப் பிரமுகர்களானவர்களுக்கு பாடம்படிக்க அவகாசம் இருப்பதில்லை மக்கள் சோற்றுக்கும் துணிக்கும் அல்லாடிக்கொண்டிருந்த வேளையில் சாராயம் இறக்குமதி செய்த பெரும்புள்ளிக்கு மக்களின் தேவைகள் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்பும் இல்லை.

கடந்த போனகாலங்கள் பற்றி நினைப்பூட்டுவோருக்கு ஐ.தே.கவின் ஆட்சிக் காலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு எத்தகைய வாழ்வு கிட்டியது என்பது மறந்துபோய் இருக்கலாம். ஆனால் மக்களுக்கு அது தெரியாதது அல்ல ஐ.தே.க ஆட்சிக்கு வந்தால் ஈ.பி.டி.பி க்கு அதிகாரத்தில் பங்கு கிடைக்காதென்று அடித்துக் கூறியவர் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவதற்குக்கூட சிரமப்பட நேரிட்டதை மறந்துபோயிருப்பது விந்தையானது.

ஈ.பி.டி.பியையும் அதன் செயற்பாடுகளையும் விமர்சிக்கும் சுதந்திரத்தைக் கூட பெற்றுக் கொடுத்திருப்பது ஈ.பி.டி.பி தான் பொங்கும் தமிழாகி நின்று கொண்ட வீரம் பற்றியும் மகேஸ்வரன் பிரஸ்தாபித்துள்ளார் இதே மகேஸ்வரன் அங்கம்வகிக்கும் ஐ.தே.க தான் அவுஸ்ரேலியாவில் தூதுவராகஇருக்கும் முன்னாள் மேஜர் ஜெனரல் ஜானகபெரேராவுக்கு பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பு வழங்க வாக்குறுதி அளித்துள்ளது என்பதும் இந்த மேஜர் ஜெனரல் பொறுப்பாக இருந்த போதே செம்மணியில் புதைகுழிகள்தோண்டப் பட்டதாக குற்றச்சாட்டுகள் கூறப்படுவதும் தமிழ் பேசும் மக்கள் நினைவில் கொள்ள வேண்டிய விடயங்களாகும்.

## பிரசார நடவடிக்கையில் கட்சிகள் மும்முரம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெற்றியைத் தம் வசமாக்கும் நடவடிக்கையில், யாழ். குடாநாட்டில் போட்டியிடும் கட்சிகள் மும்முரமாய் ஈடுபட்டு வருகின்றன.

பொதுமக்களின் வீடுதேடிச் சென்று வாக்குறுதிகளை அள்ளி வீசும்படலம் பல்வேறு பகுதிகளிலும் ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன், கட்சிகளின் முக்கியஸ்தர்களும் ஆதரவாளர்களும் ஆப்பணியில் ஈடுபட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இந்தவகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வலிகிழக்குப் பிரதேசத்திலும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் அரியாலை மற்றும் வடமராட்சிப் பகுதிகளிலும், தேர்தல் வெற்றியை தம் பக்கமாக்கும முயற்சியில் இறங்கியுள்ளனர். (உ-106-23)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 19 ↓ 08 ↓ 1922



உதிர்வு 02 ↓ 10 ↓ 2001

## அமரர் பொன்னம்பலம் சிவஞானசுந்தரம்

(பிரபல புகையிலை வர்த்தகர், மண்டைதீவு)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த
வானிலுறை தெய்வமே
மாதமோ ஒன்றாகின்றது நம்மனதிலே
வேதனையோ விலகவில்லை
வளமாக வாழ்கின்றோம ஆனால் வழிசமைத்த
நீரோ இங்கில்லை
விழிகள் தேடும் இடமெல்லாம உந்தன்
விம்பந்தானே தெரிகிறது
உங்கள்ஆத்மா சாநதியடையப் பிரார்த்திக்
கின்றோம்.

எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து உடன் வந்து உதவிய அன்பு உளளங்கட்கும் இறுதிக் கிரியைகளில் பங்குகொண்ட உறறார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும மற்றும் ஏனைய வழிகளில உதவி செய்தவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிததுக கொள்கின்றோம்.

இன்று 1-11-2001 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும், அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொளளும வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தலங்காவற் பிள்ளையார் கோவிலடி,
பதிவுகாரர் ஒழுங்கை,
திருநெல்வேலி.

(கி 2806)

## குடாநாட்டு

சாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் ஜெனரேட்டரை இயக்கவைப்பதற்கும் போக்குவரத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் வாகனங்களுக்குமே இந்தஎரிபொருள் கூடுதலாகப் பயன்படுத்தவிருந்தன.

மின்சாரவசதி இல்லாதபகுதியில் வசிக்கும் மக்கள் விளக்கு எரிப்பதற்கு மண்ணெய் விநியோகிக்கப்படவிருந்தது.

இந்தக்கப்பலில் எடுத்து வரப்பட்டஎரிபொருள்யாவும் இலங்கை எரிபொருள்கூட்டுத்தாபனத்தினால் யாழ்மக்களின் நன்மைக்காகவே அனுப்பப்பட்டிருந்தன. இந்தத்தாக்குதல் காரணமாக எதிர்வரும் நாட்களில் குடாநாட்டு மக்களுக்குத் தேவையானஅளவு எரிபொருளை விநியோகிக்க முடியாமலும் அதேவேளை மின்சார உற்பத்தி இயந்திரம் மூலம் முறையாக மின்சாரத்தை உற்பத்திசெய்ய முடியாமலும் போகும்.

எனினும் இந்த தாக்குதல் காரணமாக பாதுகாப்பு படையினருக்கு எவ்விதத்திலும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது; அதேவேளை எரிபொருள் தேவைப்படும் போது பெரல மூலம் வேறுகப்பலில் அதனைஎடுத்து வரப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் யாழ் மக்களின் சமூக வாழ்க்கையை சீர்குலைப்பதே எல்.ரீ.ரீ ஈஇயக்கத்தின் பிரதான நோக்கமாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)

# விளையாட்டு செய்திகள்





## கிரிக்கெற் சுற்றுப் போட்டி யாழ். அணிக்கு வெற்றி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, ஆகிய மாவட்டக் கிரிக்கெற் அணிகளுக்கிடையே யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் நடைபெற்று வந்த 50 ஓவர்களைக் கொண்ட சுற்றுப் போட்டியின் இறுதி நாளான நேற்று யாழ் மாவட்ட அணியும் வவுனியா மாவட்ட அணியும் மோதின இதில் யாழ் மாவட்ட அணி 90 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில்துடுப்பெடுத்தாடிய யாழ். மாவட்ட அணி 48 3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது யாழ் மாவட்டஅணி சார்பாகவிளையாடிய கௌரிபாலன் 28 ஓட்டங்களையும், ஷாஜகான் 25 ஓட்டங்களையும் பெற்றனர். வவுனியாஅணி சார்பான பந்து வீச்சில் நாலக்க, றமணன், முகுந்தன். வினோதகுமார் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்,

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வவுனியாஅணி 30 5ஓவரில் சகல விக்கெட்களையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. யாழ் மாவட்ட அணி சார்பான பந்து வீச்சில் சுதேஸ்குமார், ஷாஜகான் ஆகியோர் தலாநான்கு விக்கெட்களைக் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக ஷாஜகானும், சிறந்தபந்து வீச்சாளனாக சுதேஸ்குமாரும், சிறந்த துடுப்பாட்ட வீரனாக கௌரிபாலனும் தெரிவு செய்யப்பட்டனர்.

இம் முறை இக் கிரிக்கெற் சுற்றுப் போட்டியில் திருகோணமலை மாவட்ட அணி கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-2-223)

## யூனியன், ஸ்கந்தா அணிகள் சம்பியனாயின

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையேயான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டிகள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றன.

18 வயதிற்குட்பட்டோருக்கான இறுதிப் போட்டியில் யூனியன் கல்லூரி அணியும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின.

இதில் யூனியன் கல்லூரி அணி இரண்டு கோல்கள் போட்டு 2: 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி இரண்டாம் இடத்தையும் மூன்றாம் இடத்தை மானிப்பாய் மெமோறியல் அணியும் பெற்றன.

16 வயதிற்குட்பட்டோருக்கான இறுதிப் போட்டியில் ஸ்கந்தவரோதயா கல்லூரி அணியும் வசாவிளான் ம.வி அணியும் மோதின.

இதில் ஸ்கந்தா அணி 2: 0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று சம்பியனாகியது. (உ-2)

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நொதேன் விளையாட்டுக் கழகம் நடத்தும் 'பராபரம்' வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்றுமோதவுள்ள அணிகளின் விபரம் வருமாறு.

பி.ப. 3.00 மணிக்கு சிக்சொகக்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பிள்ளையார் விளையாட்டுக் கழகமும்,

பி.ப. 5.00 மணிக்குநல்லூர் ஐக்கியம் (நீலம்) விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நொதேன் (பச்சை) விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளன.

இப்போட்டிகள்செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. (செ

## நாரஹென்பிட்டிய

காமினி அத்துக்கோறளை இக் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பான முழு அளவிலான விசாரணைகளை அரசு சுயாதீனமாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (வ)

## தற்கொலை

ம்நற்று தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் சம்பவம் நடைபெற்ற நாரஹென்பிட்டி சித்திராலேன் பகுதியிலேயே போராசிரியர் ஜி.எல் பீரிஸின் வாஸஸ்தலமும உள்ளதுஎன்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## கிளைமோர்...

வாகனம் சென்ற சற்று நேரத்திற்குப்பின் கிளைமோர் வெடித்ததில் வாகனம் இலக்குத்தப்பித்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம)

## ஜனாதிபதி

பாராளுமன்றம் கலைக்கப்படுவது தொடர்பாகவும் சர்வஜன வாக்கெடுப்புத் தொடர்பாகவும் அரசின் நிலைப்பாட்டை ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச கூறிய பிறகு தான் எனக்குத்தெரியவந்தது என்றும் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் தலைவரை பதவிவிலக்கியது சட்டவிரோதமான நடவடிக்கையாகும் அவரைப் பதவி விலக்கியதன் மூலம் ஜனாதிபதி சட்டத்தை மீறியிருக்கிறார்.

முன்னாள் அமைச்சர் எஸ். பி திஸநாயக்காவிற்கு பலவிதமான அச்சுறுத்தல்களை அரசுவிடுத்து வருகின்றது இதன்காரணமாக திஸநாயக்காவின் குடும்பம் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டது என்றும் ஜி எல் பீரிஸ்மேலும் தெரிவித்துள்ளார். (வ)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு நவம்பர்01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;